2 3 4

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 19] விகாரி ஆண்டு பங்குனித்திங்கள் 10—4—60 [இதழ் 5

சோமநாதத்தில், ஜோதிர் லிங்க தரிசனம்

யிலாயபரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
லஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள், ஸ்ரீ சோமநாதரை வழிபடுதல்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

ஆசிரியர் :- **வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்**

துணை ஆசிரியர் :- வித்துவான். மூத்து. சு. மாணிக்கவாசகர்

உட்பொருள்

			பக்கம்
1.	சிவ ஞான போதம்	...	251
2.	வரவேற்பிதழ்கள்	...	258
3.	பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்	...	267
4.	சீவக சிந்தாமணியில் உள்ள ரசங்கள்	...	269
5.	வாழும் வழி	...	271
6.	கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும்	...	273
7.	இரண்டாம் இராசாதிராசனது திருவொற்றியூர்க் கல்லெழுத்து	...	276
8.	தருமையாதீன வெளியீடுகள்	...	280
9.	ஜோதிர்லிங்க ஸ்தலங்கள்	...	284
10.	சிவதல யாத்திரை	...	296
11.	செய்திகள்	...	303
12.	எதிர்காலம்	...	311

உ

குருபாதம்

புத்தாண்டு வாழ்த்து

வருக புத்தாண்டு வருக புத்தாண்டு
தருக நல்வளங்கள் தாரணி செழிக்க
மழைவளம் மிகவும் மண்வளம் பெருகவும்
மக்களின் மனவளம் மாண்புற உயரவும்
அன்பும் பண்பும் அறிவும் பெருகி
எல்லா மக்களும் இன்புற வாழவும்
வருக சார்வரி வருக! வருகவே!!

உ
குருபாதம்
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 19 | விகாரி பங்குனி - 10—4—60 | இதழ் 5

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

[கட்டுரை 15]

(மலர் 19, இதழ் 4, பக்கம் 189 இன் தொடர்பு)

[" கண்ணன்மேல் இட்டபோதுகள் முதல்வன் திருமுடி மேற்கண்டது " முதலிய சிலவற்றைக் குறித்துச் சிலர் எமக்கு எழுதினர். அவற்றை இதில் வெளியிடல் இயலவில்லை. அவர் எல்லார்க்கும் விடை இது :-

அக் கருத்துக்களைச் சிவஞான முனிவரே தம் சிற்றுரை பேருரை யிரண்டனுள்ளும் உணர்த்தினர். யாம் ஒன்றும்

சேர்த்திலேம். அன்றியும் அக் கருத்து அம்முனிவரதும் அன்று. புதுப் படைப்புமன்று. அது பழங்கொள்கை.

1. கண்ணன் யானே உலகெலாம் ஆயினேன் என்றது

विष्टभ्याहमिदं कृत्स्नं एकांशेन स्थितो जगत् ।

எனும் பகவற்கீதை 10 ஆவது அத்தியாயத்து 42 ஆவது சுலோகத்தாலும்.

2. முதல்வனது விசுவருபத்தைக் காட்டியது.

एवमुक्त्वा ततो राजन् महायोगेश्वरो हरिः ।
दर्शयामास पार्थाय परमं रूपमैश्वरम् ॥

எனும் 11 ஆவது அத்தியாயத்து 9 ஆவது சுலோகத்தாலும்.

3. ஏனையவற்றைக் கைவிட்டு என்னையே வழிபடுக என்றது

सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वां सर्वपापेभ्यो मोक्षयिष्यामि माशुचः ॥

எனும் 18ஆவது அத்தியாயத்து 66ஆவது சுலோகத்தாலும்

4. கண்ணன் மேலிட்டபோதுகள் முதல்வன் திருவடி மேற்கண்டது

तत्रोपहारं स्वकृतं नैशं नैत्यकमात्मनः ।
ददर्श त्र्यम्बकाभ्याशे वासुदेवे निवेदितम् ॥

எனும் பாரதம் துரோணபருவம் 81 ஆவது அத்தியாயத்து 2 ஆவது சுலோகத்தாலும்

5. கண்ணன் உபமன்னிய முனிவர்பால் தீட்சை பெற்றது

दिनेऽष्टमे तु विप्रेण दीक्षितोऽहं यथाविधि ।

எனும் பாரதம் அநுசாசன பருவத்து 14 ஆவது அத்தியாயத்து 379 ஆவது சுலோகத்தாலும் உணர்க.

தமிழிலும் முத்தோள்ளாயிரத்தில்,

"சேங்க ணேடியான்மேற் றேர்விசய னேற்றியபூப்
பைங்கண்வேள் ளேற்றுன்றுட் கண்டற்றுல்—எங்கும்
முடிமன்னர் சூடிய பூ மோய்மலர்த்தார் மாற
னடிமிசையே காணப் படும்."

என்றுள்ளது. இவ்வேண்பாவிற் குறித்தவாறு திருவடி என்று பேரியோர் பலர் எழுதியதும் 'பைங்கண் வேள்ளேற்றுன்பாற்கண்டற்றுல் என்று திருத்தியது பின்னோரது குறுகிய நோக்கம் என்று எழுதியதும் ஈண்டுக் குறிக்கத்தக்கன. அதன் உண்மையை வேண்பாவே புலப்படுத்தும்.]

இரண்டாவது சூத்திரத்தின் முதலதிகரணப்போருள் முன் உணர்த்தப்பட்டது. இனி இரண்டாவது அதிகாரணப்போருள் உணர்த்தப்படும். முதலதிகரணத்தால், பேதம், அபேதம், பேதாபேதம் மூன்றனுள் ஒவ்வோன்றே கோண்டுரைத்துப் பிணங்கும் சமயத்தாரேல்லாரையும் மறுத்து, அம்மூவகையியல்பும் தன்கண் விளங்க நிற்கும் அத்துவிதத்துண்மை ஏதுக்களாலும் உவமைகளாலும் உணர்த்தப்பட்டது, அதைச் சேவ்விதின் உணர்ந்தவர்க்கு இனி உணர்த்தப்படும் போருள் நன்கு புலப்படும்.

இரண்டாவது அதிகரணம்

1. தன்னுற் கூறப்படும் போருள் :

1. சூத்திரம் :- 'ஆணையின் இருவினையின்'
(போக்குவரவு புரிய நீக்கம் இன்றிநிற்கும்)

2. பொழிப்புரை :- 'இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வரும்'

3. சூர்ணிக்கொத்து :- 'உயிர்களுக்குக் கன்மபலனை அரனே கொடுப்பான்'

4. சித்தியார் :- 'அலகிலாவுயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்துசெல்ல' (இந்நான்கும் ஒரே கருத்தை உணர்த்துவதுணர்க.

2. ஐயப்பாடு; முதல்வன் அவ்வாறு உயிர்களோடு இயைந்து நின்று மறுபடைப்பு (புனருற்பவம்) நிகழ்த்துங்கால் உலகத்துக்குத் துணைக்காரணம் முதலியன வேண்டப்படுதல்போல அவை (துணைக்காரணம் முதலியன) வேண்டப்படுமோ? படாவோ?

3. பிறர் (பரிணாமவாதிகள்) கூறும் பக்கம்: முதல்வனது சுதந்திரத்திற்கும் அளவிலாற்றற்கும் இழுக்காய் முடியும் ஆகலின், அவனுக்கு அவை (துணைக்காரணம் முதலியன) வேண்டப்படா. ஆணையே அமையும் இருவினை ஏன்? இஃது அப்பரிணாமவாதிகள் கடா.)

4. **அதைமறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:** ஒரு நகரியைக்காப்பான் பாடிகாவலிட்டாங்கு அவை (அவ்விருவினை) அ(ம் முதல்)வனது ஆக்கினை ஆகலான், ஆன்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின் வரும் என்பது.

5. **இயைபு:** உரையாசிரியர் சிவஞானபோத வெண்பாக்களைக்கொண்டுரைத்தார்.

சிவஞானபோதச் சூத்திரங்களின் உரையாகச் செய்யப்பட்ட அவ்வெண்பாக்களை இயைபுக்குக் காட்டுதலின் பொருத்தம் ஆராயற்பாற்று.

ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவல் இட்டாங்கு அவை அவனது ஆக்கினை ஆகலான், ஆன்மாக்களுக்கு முதல்வன் ஆணையின் இருவினை வரும் என்றதன் விளக்கம்:-

" ஒரு பட்டணத்தைப் புரக்கும் வேந்தன் பாடிகாவற் றொழிலைக் களைகணுவான் ஒருவன் மாட்டு வைத்தாற்போல, எல்லா அறிவும் (எல்லா) முதன்மையும் (எல்லா) அநுக்கிரகங் களுமுடைய அம்முதல்வன் புனருற்பவத்தைச் செய்வதாகிய தனதாணையை அவ்விருவினைகள் மாட்டுவைத்து நடாத்து தலே முறை ஆகலான், இவ்வான்மாக்களுக்கு இருவினை முதல்வன் ஆணையின் வரும் " (சிவஞான மாமுனிவர் உரை).

'முதல்வன் செய்யும் செய்தியெல்லாம் உலகத்தோடு ஒப்ப நிகழ்வன ஆகலின், ஈண்டைக்கு அரசன் செய்தி உவமை ஆயிற்று' (ஷை)

'பாடிகாவலாவது களைகணுவானொருவனைக்கொண்டு வேந்தன் செய்விப்பதோரு தண்டத் தொழில் விசேடம். அது 'கோடிகாவனைக் கூறுத நாளெலாம் பாடிகாவலிற் பட்டுக் கழியுமே' என்னுந் திருப்பாட்டானும் அறிக. இஃது அறியாதார் தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் உரைப்பர்.' (ஷை)

இங்கே அறியாதார் என்று சிவஞானமாமுனிவர் சொல்லியது எவரையோ? அறியோம். ‡ பழையவுரையில் விளக்கம் என்றுள்ள இரண்டும் உணர்தல் நன்றாகும்.

வினா :- 1. வினை உண்டு என்பதற்கு என்ன பிரமாணம்?

2. அதுவே உயிர்க்குப் பயனாய் வரும் என்பது ஏன்?

3. அடுத்த பிறவிக்கு வினை ஏறும் ஆறு எவ்வாறு?

4. அது முதல்வனை இன்றி அமையாமை எப்படி?

‡ அ'து துறைசையாதீன வெளியீடு.

விடை: 1. முற்சூத்திரத்தில் உள்ளதே தோன்றும்; இல்லாதது தோன்ருது என்பது அறிவிக்கப்பட்டது. புண்ணிய பாவம் ஆகிய சஞ்சித வினை முன் உள்ளதே. சஞ்சிதவினையின் பயன் இன்பத்துன்பங்கள். அவ்வின்பத் துன்பங்களைத் தோற்றுவிப்பது சஞ்சிதவினையே. அவ் வின்பத் துன்பங்களை நுகர்தற்கு உடம்பு நிலைக்களம். அவ்வுடம்பையும் சஞ்சிதவினையே தோற்றுவிக்கும்.

2. இன்பத்தையுந் துன்பத்தையும் சித்தாகிய உயிரே அநுபவிக்கும். சடத்துக்கு இன்பத்துன்ப நுகர்ச்சி (சுக துக்காநுபவம்) இல்லை. இன்பத்துன்பங்களை நுகர்தற்கு நிலைக்களம் ஆகிய உடம்பு சடம். அச்சடத்திற் பொருந்தி அவ் வின்பத்துன்ப நுகர்ச்சி உறுவது சித்தாகிய உயிரே.

3. முற்செய்த வினையை நுகருங்கால் விருப்பும் வெறுப்பும் நிகழும். இன்பத்துன்ப நுகர்ச்சிக்கு விருப்பு வெறுப்புக்கள்ஏதுவாகும். அவ்விருவினை அநுபவத்திற்கு ஏதுவான முறைமையிலே மேலைக்கு வினை உளதாகின்றது. இன்பமோ துன்பமோ உயிர் நுகரப்படாமல் பழவினைப் பயன் அதனது நுகர்ச்சியாவதில்லை. அப்படியாயின், அவ் வினையே பயனுக வரும், முதல்வன் ஏன் என விஞ எழும்.

4. உழவர் செய்யும் தொழிலுக்குத் தக்க பயனை விளைவிப்பது விளை நிலமே அன்றி அத்தொழில் அன்று. உழவர் செய்யும் அத்தொழிலே தன் பயனை விளைவிக்க மாட்டாது. அதுபோல வினையும் அதன் விதையும் ஆகித் தொன்றுதொட்டுவரும் அவ்வினைகளை வள்ளலாகிய முதல் வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவான். அவ்வாறு அன்றி வினைதானே உயிர்கட்குப் பயனுகிவந்து பொருந்தமாட் டாது. இப்பொருளைத் தன்கண் கொண்டுணர்த்தும் சிவஞான போத வெண்பா இது:-

"உள்ளதே தோற்ற உயிர் அணையும் அவ்வுடலின்
உள்ளதாம் முற்செய்வினை உள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர் செய்திப் பயன்விளக்குஞ் செய்யேபோற்
செய்வன் செயல் அணையா சென்று."

குறிப்பு :- உள்ளதே-சஞ்சிதவினையே. இல்லது தோன்ருது என்பது முன்னர்க் கூறியதாயிற்று. முன் உள்ளதாய (புண்ணிய பாவம் என்னும் இரு கூற்றுச்) சஞ்சிதவினையே, உள்ளதாய புண்ணிய பாவம் என்று இயையாது. உள்ளது என்னும் ஒருமைக்குச் சஞ்சிதவினை என்னும் ஒருமையே பொருத்தமாம். உள்ளனவாய புண்ணிய பாவம் என்றில்லை. சஞ்சித கருமாநுபவம் இன்பத்துன்ப நுகர்ச்சி. இன்ப துன்பம் என்றெழுதுவது குற்றமாகும். விதியுயிரீற்றின் முன் வந்தவல்லெழுத்து மிக்குப்புணர்ந்த தொடர் அது. அஃதறியாதார் இன்பதுன்பமென்பர். 'உள்ளடைவு - உள்ளுதற்கு ஏதுவாய அடைவு'. அடைவே - முறைமையில். ஏகாரம் ஏழாவதன் பொருட்கண்வந்தது. உள்ளுதல் - ஈண்டு நுகர்தல். அதற்கு ஏதுவான முறைமையாவன :- நுகர்தற்குத் துணைக்காரணம் ஆகிய விருப்பு வெறுப்புக்கள். "மேலைக்கு வருவினை யேதென்னின்..............புண்ணிய பாவங்கள் என்றே" என்னும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தை ஈண்டுணர்ந்து தெளிக. (தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Sri Panchanadeeswaraswami Devasthanam,

Tiruvaiyaru.

அறம் வளர்க்கும் திருத்தாயைப் பங்கிற் கொண்ட
  ஐயாறன் செய்யபொற் சோதி பத்தித்
திறம் வளர்க்கும் அப்பமுனி கண்ணிற் காணத்
  திருக்கயிலைக் காட்சியினைக் காட்டும் பெம்மான்
மறம்வளர்க்கும் திரிபுரத்தை மாய்த்த தேவன்
  வாழ்கின்ற திருக்கோயில் கண்டேன் தொண்டின்
அறம்வளர்க்கும் பணியாளர் அன்பு கண்டேன்
  நீடுழி வாழ்கவென்று வாழ்த்தி னேனே.

(ஒ-ம்) கி. வா. ஜகந்நாதன்,

ஆசிரியர், 'கலைமகள்' சென்னை.

14—2—60.

வரவேற்பிதழ்கள்

* விருத்தாசலம்

வழக்கறிஞர், கி. நாராயணசாமி பிள்ளை B. A., B. L.,

அருள் ஒளி வீசும் குருமணியே வருக!

எங்கள் வாழ்வை நெறிப்படுத்தி, வான் இன்பம் பெறும் வழியைத் தங்கள் வாக்காலும் நோக்காலும் அருளவந்த பெருந்தகையே வருக!

மனிதனின் அகவளர்ச்சி வளம்பெறுவிட்டால் புறவாழ்வு பலன் தராது என்ற பேருண்மையை உணர்ந்து, மனித இனத்தை மார்க்க நெறி காட்டி அகத்திலும் புறத்திலும் உயர்த்தும் புனிதரே வருக!

தலத்தில் உயர்ந்த கயிலையைத் தரிசித்து. மதத்துள் சிறந்த இந்து சமயத்தை எங்கும் பரப்பி, தெய்வத் தவநெறியும் சைவத் தனிநெறியும் ஓர் உருவமாகி வந்த உத்தமரே வருக!

பொறி புலன்களுக்கு அரணும் ஆலயங்களைப் புதுப்பித்துப் புனித வாழ்வுக்கு அடிப்படையான திருவிழாக்களையும் கருத்தரங்குகளையும் நிறைவித்து, நம்பிக்கையும் பக்தியும் வளர நல்ல நூல்களை விளக்கி வெளியிட்டு, அறிவானந்தத்தை ஆன்மகோடிகள் பெற்றுய்ய உருவ வழிபாடுகளை ஊக்கி, நாடு வாழத் தான் வாழ்ந்து நற்பணி புரியும் நாயகமே வருக!

---

* **14—3—60** திங்களன்று விருத்தாசலத்தைச்சார்ந்த மணவாள நல்லூர் கொளஞ்சியப்பர் ஆலயத்திற்கு எழுந்தருளிச் சிறப்பித்த தருமையாதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு அளித்த வரவேற்பு.

பால சூரியன்போலக் கருத்துக்கினிய துறவுக் கோலத்துடன் பண்பும் அன்புமாகிய கண்கள் ஒளிவீச தூய உள்ளத்தின் சீல வாக்கால் எங்கள் சிறுமையெலாம் போக்கி மனிதர்களைத் தேவர்களாக்க வந்த தெய்வக் குருமணியே வருக!

அன்பே சைவம் இன்பமே தமிழ் என்ற நல்லுணர்வை எங்கும் பரப்பும் சங்கம் வளர்க்கும் சைவ குருவே வருகவே! தமிழின் திருவே வருகவே!

யாதொரு தெய்வமும் மாதொரு பாகனே எம்மொழியும் தெய்வம் தந்த நன்மொழியே, மொழியைவிட பக்தியும் சொல்லைவிடக் கடவுள் நம்பிக்கையும் முக்கியமானது என்று வலியுறுத்திய சமரச ஞானியே தவப்பெரும் மௌனியே வருக!

சீர்தவ யோகச் சீலரே வருக!
பார்வையால் எங்கள் பாவமும் பவமும்
நீக்க வந்த நின்மலப் பூரண
வாக்கின் அரசே வழிபடு கடவுளே
வருகவே வருக! தருமைத் தலைவா வருகவே!

விருத்தாசலம், ஸ்ரீ பழமலைநாதர் ஆலய நிர்வாகிகள்

தருமை ஆதீனம் தழைத்தினிதோங்க அருமைசால் குருமூர்த்தியாம் அண்ணலே வருக!

தாங்கள் அறநிலைய பாதுகாப்புக் குழுவினருக்கும் அறம் பல ஆற்ற வேண்டுமென்ற ஆர்வமுள்ளார்க்கும் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கின்றீர்கள். தங்கள் முகக் கதிர் கண்டு கதிரவனைக்கண்ட கமலம் மலருவது போன்று அகம் மகிழ்வடைந்தோம்.

முதுகுன்று எழுந்தருளும் முனிவா வருக!

ஸ்ரீ மெய்கண்டார் பரமஞானமூர்த்தி, ஸ்ரீ திருஞானசம்பந்தர் பரம கருணாமூர்த்தி, மெய்கண்டாரின் அபாரமான ஞான சக்தியையும் குருஞானசம்பந்தரின் கருணை நிறைந்த விசாலமான இருதயத்தையும் ஒரு திருமேனியிலே பொருந்தித்

தாங்கள் திகழ்கின்றீர்கள். அதன் பயனுய் எல்லா இடங்களிலும் உள்ள ஏழைகள், அனுதைகள். நோயாளிகள் தாழ்த்தப் பட்டவர்கள் பொருட்டு உள்ளங்கரைந்து உருகி அனுதாபப் படுகிறீர்கள். வாதுபுரியும் பல்வேறு சமயங்களையும் சமரசப் படுத்தி, பக்தியும் ஞானமும் ஒருங்கே அமைந்த ஆச்சரிய மான சமரச சித்தாந்த நிலையை எங்கும் ஏற்படுத்தி வருகிறீர்கள்.

ஒப்பற்ற ஞானமூர்த்தியே வருக வருக! கயிலை தயாநிதியே வருக வருக. கயிலையைக்கண்ட கயிலைக் குருமணியே வருக.

திருக்கயிலாய பரம்பரைக் குருமகாசந்நிதானம் கயிலாய நாதனைக் கண்ட திருவருள் காட்சியோடு இங்கு எழுந்தருளும் பேற்றைப்பெற்ற நாங்கள் பெருமை அடைகின்றோம். தங்கள் வருகை எங்களுக்கு சிவமணமும் தமிழ் மணமும் கலந்து வீசும் தண்ணளிப்பெருக்காகக்கொண்டு வாழ்த்தி வணங்கு கிறோம். இச்சிறப்புள்ள இடத்தில் வரவேற்கும்பேறு கிடைத்தது எங்கள் நல்வினைப் பயனே ஆகும்.

சமயாசாரியர் வழிச் செல்லும் சான்றோய் வருக வருக!

இத்தலத்தின்கண் நெடுநாளாகத் தங்கள் ஆதீனக் கிளைமடம் இருந்து மறைந்தது கண்டு வருந்துகின்றோம். அதை மறு படியும் ஸ்தாபித்து, தங்கள் ஆதீனம்கருதும் நோக்கமும் நிறைவேறும்படி வேண்டுகின்றோம்.

திருத்தருமை அமர் தெய்வக் குருமணியே;

இதுகாறும் இவ்வாலயத்தில் உச்சிகாலபூஜை தங்கள் ஆதீனத்தில் நிகழ்ந்துவந்தது நின்று போனதை மறுபடியும் தாங்கள் புதுப்பித்து ஸ்ரீ பழமலைநாதர் அருள்பெற்று அவ் வருள்தனை யாவருக்கும் வழங்கும்படி வேண்டுகிறோம்.

எடுத்துக்காட்டாய் இலகுறும் மணியே!

பணிபல புரிந்து அறம் ஆற்றி, மக்கள் உய்யும் வண்ணம் பல்லாண்டு வாழ ஸ்ரீ பழமலைநாதன் திருவடியை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகிறோம்.

விருத்தாசலம் நகரப் பொதுமக்கள்

தவநிலை யோங்கும் தருமையங் குருவே! வருக! வருக!

உலகின்புறஇருள் கெடத் தோன்றி ஒளிசெய்யும் பலர் புகழ் ஞாயிறுபோல உலக மக்களின் அகத்திலுள்ள அஞ்ஞான இருளைப் போக்கும் ஞானநல்லொளி நாளும் உதவும் ஞான சூரியனே! தருமையம்பதியில் தனியரசு செலுத்தி அடியார்க்கு அருளாசி வழங்கும் பெருங்கருணைத் திறத்தினை யாம் போற்றிப் புகழும் ஆற்றலுடையேம் அல்லேம்.

சைவம் காக்கும் தனிப்பெரும் தலைவ! வருக! வருக!

அமணிருள் பரந்த அக்காலத்து ஆளுடைய பிள்ளையும் அருள் நாவுக்கரசரும் அவதரித்து புறச்சமய இருள் ஒட்டிப் புகழ்ச்சைவ ஒளி பரப்பினர். அவ்வாறே சமயப்பற்று குறைந்து நாத்திகம் பேசி நாத்தழும்பேறும் இக்காலத்தில் சமயப் பற்றும் சமய அறிவும் மக்களிடையே பரவ மாபெரும் தொண்டுகள் மாண்புடன் இயற்றினீர்கள். சைவ சித்தாந்த சாத்திரக் கருத்தைச் சகமேலாம் உணரப் பாட வகுப்புக்கள் வைத்துப் பண்புடன் நடத்தியும் சாத்திர நூல்களை வெளியிட்டு வழங்கியும் வண்புகழ்த் தொண்டு வளமுடன் இயற்றினீர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் முதலிய நால்வர் பாசுரங்களை நானில மக்கள் நன்கு உணர ஆலயங்களில் சிலாசாசனம் செய்வித்தும், இசையோடு திருப்பதிகங்களை ஓதுவித்தும் நன்கு வளர்த்தினீர். குருஞானசம்பந்தக் குருவின் பெயரால் வார வழிபாட்டுக் கழகம் அமைத்து அருந்தலம் பலவற்றிற்கும் அன்பர் பலரையும் அழைத்துச்சென்று வழிபாடியற்றி அரனடிக்கன்பர் ஆக்கிய அருஞ்செயலின் திறம் அளவிடற்கரியதோ!

அறப்பணி பலபுரியும் அருந்தவச் செல்வ! வருக! வருக!

ஆலயப் பணிபல அமைவுடன் இயற்றினீர்கள். நித்திய நைமித்திக வழிபாடுகள் குறைவிலாது நடைபெறும் வகையில் நாளும் பல நற்றொண்டுகள் புரிந்துவருகின்றீர்கள். ஆலயங்கள் பலவற்றிலும் லக்ஷார்ச்சனை, கோடியர்ச்சனை, சங்காபிஷேகம் முதலியவற்றைப் பரனடிக்கன்பர் பார்த்து மகிழப் பலகால் இயற்றினீர்கள்.

போதுநலப் பணிபுரி புண்ணியமூர்த்தியே வருக! வருக!

அனதை இல்லம் அமைத்தும், நன்னீர்ப் பொழியும் தண்ணீர்க் குழாய்கள் அமைத்தும், பாலகர் தமக்குப் பால் வழங்கியும், ஏழை எளியவர்க்கு இன்னமுது அளித்தும். பள்ளிச் சிறுர்க்குப் பகலுணவளித்தும், கலைக் கல்லூரியும், கல்விச் சாலைகளும் அமைத்தும், மகப்பேறில்லமும், மருத்துவ மனைகளும் மாண்புற அமைத்து காலத்திற்கேற்ற சாலச்சிறந்த இப்போதுநலப் பணிகளைப்புரியும் தங்களை யாங்கள் போற்றிப் புகழாதிருக்க ஒல்லுமோ!

கயிலைக் காட்சி கண்ட நற்குருவே! வருக! வருக!

அணுகுதற்கரிய அருங் கயிலையை அடைந்து சிற்சத்தி யோடு கூடிய சிவ பரம்பொருளை நேரே கண்டு சிவானந்த வாழ்வில் திளைத்து திருவருள் பெற்று எம்மனோர்க்கெல்லாம் இனிது வழங்கிய பெருங்கருணைத் திறத்தினைப் பெரிதும் போற்றுகின்றேம். எந்தமக்கிரங்கி இன்னருள் வழங்க இந்நகர்ப் போந்த குருமகா சந்நிதானம் அவர்களை வருக வருகவென வரவேற்று வாழ்த்திப் பணிகின்றேம்.

விருத்தாசலம் ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் தேவஸ்தானம்
M. அருணுசல குருக்கள்

கல்லுருவ நரசிங்கம் கைதட்டித் தலையாட்டி
'வல்ல தமிழ்! நல்ல கதை! வாழ்க தமிழ்க் கம்பன்' எனச்
சொல்ல வளர் அரங்கர்முன் அரங்கேறிச் சுடர்த்தமிழ்த்தாய்
இல்லத்தில் ராமகதை எழுந்ததுபங்குனியத்தம்!

அருந்தமிழ் வளர்க்கும் ஐயன்! அம்மவோ ஆன்ம ஞானம்
பொருந்தவே திருந்தச் செய்த புகழ்மொழி ஆரியன் காண்
பெருந்தகை சுப்ர மண்ய தேசிகப் பெம்மான் பாதம்
திருந்தயிம் முதுகுன் றைச்சீர் செய்வதும்பங் குனியத்தம்மே!

வடமொழியும்; தென்தமிழும்; பார தத்தாய்
வதனத்தில் விளங்குமிரு கண்கள் என்றும்;
உடனுறையும் மொழியையெலாம் இக்கண் கொண்டே
உற்றறிந்தால் கற்றறிந்தீர் ஒருமை காண்பீர்!

விடமொழியால் வேற்றுமைகள் விளக்க வேண்டா
விடுமதனை ஒற்றுமையைப் பற்றும் என்று
திடமொழியால் குடிகுன்றும் வழிமறுக்கும்
தேசிகனே மாசறியாய் வருக தேவா!

இமயமுதல் குமரிவரை இலங்குமரன் கோவில்
யாவும்வழி பட்டுயரச் சுற்றிவரும் கோவே
சமயமதில் தலைமைபெறும் சைவநெறி தழைக்கத்
தமிழ்ச்சுவைகொள்சித்தாந்தஅறிவரங்கம்சமைப்போய்
குமையிருள்சேர் நாத்திகத்தின் கொடியறுக்கும் வீரர்
குலமணியே! சிவமணியே! குருமணியே! திருப்பேர்
அமை சுப்ர மணியெனயாம் அழைக்கவரும் மணியே!
அருள்மணியே! தவமணியே! எம்மிருகண் மணியே!

பழுதுறு கோவிலன்தன் பார்வையில் இல்லை யாரும்
தொழுதுயர் தெய்வ மூர்த்தம் துயர்தரு நிலையில் கெட்டு
இழிதரு தன்மைக் கிங்கே இடமிலை யென்ன, வன்ன
அழகொடு கோவில் யாவும் அணிசெயும் ஐயா வாரீர்!

சித்தி நெறி காட்டும் தெய்வச் சித்தரே வருக!

மெய்கண்டார் பன்னிரண்டு சூத்தி ரத்துள்
மெய்ப் போத சிவஞானம் வகுத்துக் காட்ட
கை கண்ட நெல்லியென அவை விளங்கக்
கருணையினால் அருள்நந்தி சித்தி காட்ட
சைவநெறிச் சித்திநெறி அதனைப் பற்றித்
தெய்வநெறி யதில்மக்கள் தம்மை ஊக்கிப்
பொய்வழியாம் இருளழிக்கும் போத பானு
புகழ்த் தருமைத் தவக்கொழுந்தே வருக வாழ்க!

வேதாந்தத்தை ஆலடியில் வீற்று நால்வர்க் கருள்புரியும்
மேதா தட்சி ணாமூர்த்தி; வேளூர் முத்துக் குமரனொடு
காதார் குழையாள் துர்க்கையெனும் கடவுள் உருவம் பலபோற்றி
போதந் தத்தின் புனிதவழி விளக்கும் புலவர் வருகவே!

பொங்கும் பொன்னிக் கரையருகே துங்கத் தருமைப் பதியதிலே
தங்கி யெங்கும் சிவமாக்கும் தலைவா வருக வருகவே!
தான் போம் வழியில் தர்மமொடு தமிழும் சைவத் தவநெறியும்
மேன் மேல் வளரப் பவனிவரும் வேதச்சுடரே! சித்தாந்த

வான் போம் துணையே! வருகவே! வளரும் எங்கள் முதுகுன்றில்
தேன்போல்மொழியாய்சிவநேயம்செழிக்கச்செய்வோய்வருகவே!
தெங்கு வாழைச் சோலைவளர் துங்கத் தருமைப் பதியதிலே
தங்கி எங்கும் சிவமாக்கும் தலைவா வருக வருகவே !

விருத்தாசலம்

நா. வே. அ. இரத்தினசபாபதிச் செட்டியார்

சீர்பெறு காவிரி செழிப்பினை நல்கும்
ஏர்பெறு சோழ நன்ன டதனில்
தருமை யம்பதிவாழ் தவமுதற் குருவே !
அருமைக் குணமெலாம் அமைந்தநற் சான்றோய் !
திருவும் கல்வியும் தெளிபொருள் ஞானமும்
ஒருங்கே அமைந்த ஒளிவளர் விளக்கே !
சைவசித் தாந்த சாத்திரக் கருத்தினை
மெய்வகை மக்கள் மேவிடச் செய்தோய்
நூல்பல தோற்றியும் நுவலரும் சிறப்பிற்
கலைபல வளர்த்தும் கட்டுரை வரைந்தும்
கல்விச் சாலை கவினுற நடத்தியும்
அருந்தமிழ் தன்னை அவனியில் யாவரும்
பெருந்தன மாகப் பேணிடச் செய்தாய் !
அரனுர் மகிழ்ந்துறை ஆலயம் பலவினும்
சிறப்பொடு பூசனை சிறந்தே ஓங்க
அறப்பணி பலவும் அருளொடு அமைத்தனை
நால்வர் பாசுரம் நானிலம் விளங்க
நாளும் திருப்பணி நயந்தே புரிந்தனை
எளியாரை வாட்டி இடுக்கட் படுத்தும்
பசிப்பிணி போக்கிய பண்பார் தலைவ !
திருக்கயி லாய பரம்பரைக் கேற்ப
திருக்கயி லாய மதனை அணுகி
கண்ணுதற் பெருமான் கழலிணை வணங்கி
எண்ணுதற் கெட்டா இன்னருள் பெற்று
மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் எய்த
அருளொளி வழங்கி ஆசிகள் கூறினை
மருளும் பிணியும் மாய்ந்திடச் செய்யும்
குருஞான சம்பந்த குருவின் பெயரால்

வாரமாய் வழிபா டியற்றும் கழகம்
பாரினிற் பலதலம் வணங்கச் செய்து
திருமுது குன்றெனும் ஒருபெரு நகர்க்கும்
வருகை தந்த வண்புகழ்ச் செல்வ!
வருக! வருக! வெனவழுத் திடுவோம்
பலதலம் சென்று பரனை வணங்கும்
அலகிலா அன்பர் அனைவரும் வருக!
பரம்பரைத் தொழும்பு செய்பான்மை யுற்ற
அன்புறு சீடனும் அடியேன் தனக்கும்
பணிவுறும் இந்நகர்ப் பழவடி யார்க்கும்
அணியுறு வருளோ டாசி வழங்குக!
திருமுது குன்றத் திறைவனை வணங்கித்
திருவருள் பெற்ற குருவே வாழி!

† பேரூர், பண்டித, அ. கந்தசாமிப் பிள்ளை

திணை : பாடாண். துறை : வாழ்த்தியல்.

பஃறுழிசைக் கொச்சகக்கலிப்பா

தரவு.

பூவார்ந்த பொழில்புடைசூழ் புனற்பொன்னித் திருநாட்டுத்
தேவார்ந்த திருத்தருமை திருவாரூர் கூடலெனப்
பாவார்ந்த முப்பதியின் பதியாகி முத்தமிழும்
மேவார்ந்த முப்பொருளும் விளக்கிமூ வுலகுபுகழ்
காவார்ந்த திருத்தருமை கவின்மடா லயத்தரசாய்க்
கோவார்ந்த கால்நூற்றுப் பட்டத்தெங் குருமணியே!

தாழிசை,

1. திருக்கயிலை நமதுறையுள் திருமரபும் எனக்கொண்டு
மருக்கயிலை மலைபணிந்து வரும்பெருமை படைத்தனையே.

---

† திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைச் சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார்க்கு கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் என்ற பட்டம் வழங்கியருளியபொழுது, ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்கள் திருவருளைப் பாராட்டிப் பேரூர், பண்டித, அ. கந்தசாமிப் பிள்ளை கூறிய வாழ்த்துப்பா.

2. மதிவிளக்குஞ் சகளவுரு வருமிருபத் தைந்தெனவே
அதிவிளக்கம் பட்டம்இரு பத்தைந்தில் அமைகுவையே.

3. சீரலைவாய் முதலாகப் படைவீடு சென்றுசென்று
பேரியல்நின் திருநாமம் பிறங்குபொருள் விளக்கினையே.

4 தண்கூடல் திருவாரூர் தமையாண்ட செயற்கியைய
விண்கூடு தருமையினும் வீற்றிருந்தாண் டருள்குவையே.

5. பணியணியும் கறைமிடறும் நுதல்விழியும் பழையவென
மணியணியும் அணிமிடறும் அருள்நோக்கும்
வயங்குவையால்.

6. சிந்தைமனங் கடந்தகன்ற திறனறியா துணைப்புகழ
முந்துறுமெம் பேதைமைக்கு முகிழ்ப்பதுநின் குமிண்சிரிப்பே.

(தனிச்சொல்) எனவாங்கு,

(சுரிதகம்)

வாழியெம் பரம சாமி வாழி!
நந்தியெம் பெருமான் முந்துசீர் மரபின்
தருமையம் பதியின் திருமடா லயத்துத்
திருவருட் செங்கோல் செலுத்தி யருளி
இருபத் தைந்தாம் பட்டத் திலங்கும்
கயிலைச் சுப்பிர மணிய தேசிக
பரமா சாரிய குருமணி! வாழி!
அண்ணா மலைநகர்ப் பல்கலைக் கழகத்து
முந்திய திராவிட மொழியாய் துறையிற்
கல்வெட்டுப் பகுதியிற் கலைத்தொழில் புரியும்
சுந்த ரேச வாண்டையார் தமக்குக்
கல்வெட் டாராய்ச்சிக் கலைஞர்ப் பட்டம்
வழங்கினை வாழி பெரும! முந்துபல்
புலவர் தமக்கும் புனைபெயர் வழங்கல்போல்
இன்றும் வழங்கினை இணையில் குருமணி!
வாழிய தருமை வாழ்க மடாலயம்
வாழிய நினது வயங்கு சந்தானம்
என்றும் வேல்கவென் றேத்துதும்
மன்றுள்நின் ருடும்நின் மலரடி புனைந்தே.

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை :

ஸ்ரீ மல்லிகார்ச்சுனம் (ஸ்ரீ சைலம்)



தருமையாதீனம 25ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ மல்லிகார்ச்சுனரை வழிபடுதல்

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை :

மகாகாளம் (உஜ்ஜயினி)



தருமையாதீனம்
25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ மகாகாளேசுவரரை வழிபடுதல்

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை ;

ஓங்காரம் (மாந்தாதா)

தருமையாதீனம்
25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ ஓங்காரேசுவரரை வழிபடுதல்

ஜோதிர்லிங்க தரிசன யாத்திரை :

வைத்தியநாதம் (பரலி)

தருமையாதீனம்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ வைத்தியநாத லிங்கத்தை வழிபடுதல்.

பழந்தமிழ் நூல்களில் உயிர் வகைகள்

வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்கள்
ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

(மலர் 19 இதழ் 4 பக்கம் 213 இன் தொடர்ச்சி)

காட்டில் எலி

எலி, காட்டில் வேலிகளிலும் வரகு விளையும் புனங்களிலும் மேடுகளிலும் வாழும். காட்டிலுள்ள வேட்டுவச் சிறுவர் இவ் வெலியைக் கொன்று தின்னும் பழக்கமுள்ளவர்கள். இவர்கள் பலராகச் சேர்ந்துகொண்டு ஊகம் புல்லின் நுண்ணிய கோலில் உடைமரத்தின் முள்ளைச் செருகி அதை அம்பாகக் கொண்டு வலாரை வில்லாகச் செய்து வளைத்துக்கொண்டு பருத்திச் செடிகள் நிறைந்த வேலியிலுள்ள எலியைக் கொல்லுதற்காக அதன் வரவைப் பார்த்துக்கொண்டிருப்பார்களாம். இந் நிகழ்ச்சியை,

" வேட்டுவர் விழ்துணை மகாஅர்
சிறியிலை யுடையின் சுரையுடை வான்முள்
ஊக நுண்கோற் செறிந்த அம்பின்
வலாஅ வல்வில் குலாவரக் கோலிப்
பருத்தி வேலிக் கருப்பைப் பார்க்கும்...புன்புலம் "

(புறநா. 324)

என ஆலத்தூர் கிழார் அழகுறப் பாடியுள்ளார். இதனால் பருத்தி வேலியில் எலி வாழும் இயல்பினது என்பதும், வேட்டுவச் சிறுவர்கள் அதனைக்கொன்று உணவாகக் கொள்வார்கள் என்பதும் அறியலாம். புதிதாக வரகு அரிந்த புனத்தில் உள்ள அரிதாளில் சிந்திய வரகினை உண்பதற்கு எலி வரும் என்று அதைக்கொல்ல வேட்டுவச் சிறுவர் அதன் வரவு பார்த்துக் கொண்டிருப்பார்களாம்.

" புதுவர கரிதாள் கருப்பைப் பார்க்கும்
புன்றலைச் சிருஆர் " (புறநா. 322)

என ஆவூர் கிழார் இந்நிகழ்ச்சியை அறிவித்தல் காண்க. இதனால் வரகு விளைபுனத்தில் எலி வரும் என்பதை அறியலாம்.

வேண்டிய உணவு உண்ட காடைச்சேவல் ஒரு மேட்டில் அளைசெய்து வாழும் எலியை ஆட்டம் காட்டும் சுவையான நிகழ்ச்சியை உறையூர் மருத்துவன் தாமோதரனார் உரைக்கின்றார்.

" போறிப்புறப் பூழின் போர்வல் சேவல்
வேனிற் கோங்கின் பூம்போகுட்டன்ன
முடந்தை அஞ்செவிய கோட்டேலி ஆட்ட
கலியார் வரகின் பிறங்குபீ ளோளிக்கும் " (புறநா. 321)

என்பது காண்க. இதனால் எலி, வேனிற்காலத்துப் பூக்கும் கோங்கின் போகுட்டுப்போன்று வளைந்த அழகிய சேவியை யுடையது என்பதும் வரகுகதிர்ப் போரில் ஒளித்துக்கோள்ளும் காடையோடு அங்கும் இங்குமாய்த் திரிந்து விளையாடும் இயல்பினது என்பதும் புலனாம்.

9. வெள்ளெலி

இது, குன்றுமணி போன்று சிவந்த கண்ணையுடையதாம். வெள்ளை நிறம் அமைந்த மயிரையுடையதாம்; சிறிய காலை யுடையதாம். ஆண் எலிக்குத் தாடிகூட இருக்குமாம். சிவந்த பரல் நிறைந்த முரம்பான நிலத்திலே இது அளை செய்தற்காகப் புழுதியுண்டாகச் சிதர்க்குமாம். இதன் இயல்புகளை உள்ளவாறு உணர்ந்து உறையூர் மருத்துவன் தாமோதரனார் உரைக்கின்றார்.

" குன்றி யன்ன கண்ண குரூஉ மயிர்ப்
புன்தாள் வெள்ளெலி மோவா யேற்றை
செம்பரல் முரம்பில் சிதர்த்த பூழி " (அகநா. 133)

என்றது காண்க. (மோவாய் - தாடி). இந்த எலிமயிரினால் உயர்ந்த ஆடை நேய்வதுண்டு என இளங்கோவடிகளும் அடியார்க்கு நல்லாரும் கூறுகின்றனர். (சிலம்பு - ஊர் - 205)

(தோடரும்)

சீவக சிந்தாமணியில் உள்ள ரசங்கள்

பன்மொழிப் புலவர்,
திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்
(ஒய்வுபெற்ற ஆராய்ச்சிப்புலவர், சென்னைப் பல்கலைக் கழகம்)

(மலர் 19, இதழ் 2, பக்கம் 94 இன் தொடர்ச்சி)

கருணரஸம், விருப்பமானவை நீங்குதலாலும் விருப்ப மில்லாதன சேர்தலாலும் உண்டாகும். இறந்த சுற்றத்தார் முதலியோர் ஆலம்பன விபாவம். உறவினர் அழுகை முதலியன உத்தீபன விபாவம். தெய்வத்தைப் பழித்தல், நெட்டுயிர்ப்பு, முகவாட்டம், நிலத்திற் புரளுதல், மூர்ச்சித்தல் முதலியன அனுபாவம். குரல் வேறுபாடு, நிற வேறுபாடு, கண்ணீர், ஸ்தம்பம், கம்பம், ப்ரளயம் முதலியன ஸாத்விகபாவம், நிர் வேதம், க்லானி, ஸங்கை, ஔத்ஸுக்யம் (விரைவு) மோஹம் சிரமம், த்ராஸம், விஷாதம், தைன்யம், ஜடதா, உந்மாதம், அபஸ்மாரம், ஆலஸ்யம், மரணம் முதலியன ஸஞ்சாரிபாவம். இவற்றால், சோகம் என்னும் பாவம் நிலைபெற்றுத் துய்க்கப்படின் கருணரஸம் ஆகும். அதாவது, சோகம் என்னும் ஸ்தாயீ பாவமே கருணம் ஆகின்றது என்பதாம்.

மகனுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று கருதித் தாபதப்பள்ளியில் தவம் புரிந்திருந்த விசயை ஒருநாள் மகனை நினைத்துக் கண்ணீர் வார்த்து வருந்தியிருக்கையில் சீவகன் தோழர் கண்டனர்; கண்டு அவளை வணங்கி, 'அன்னையீர், தாங்கள் யாவரீர்? இங்கு வருதற்குக் காரணம் யாது?' என்று வினவ, அவள், 'நுமது வரவு கூறுமின்' என்று வேண்ட, அவருள் தேவதத்தன் என்பவன் தமது நாடும் நகரும் குலமுங் கூறி, தாங்கள் சீவகனுக்கு நண்பர் என்று தெரிவித்து, சீவகன் வரலாற்றைச் சொல்லி வருகையில்,

> 'அந்திலொரு நாளவனை அரசனொரு தவற்றால்'
>
> 'தொடிகடவழ் வீங்குதிர டோளிறுக யாத்துக்
> கடிகடவழ் குழன்மகளிர் கசிந்துமனங் கரியக்
> கொடிகடவழ் மாடநகர்க் கொல்ல'

என்றவளவில், விசயை இடிவீழ்ந்த நாகம்போல் படி வீழ்ந்து மூர்ச்சித்தாள். தேவதத்தன் முதலியோர் சாந்தரைத்துக் கலந்த

பனிநீரால் தெளிவித்தனர். சிறிது தெளிவுற்ற தேவி புலம்பி அழுதரற்று வாளாயினுள்.

' கைம்மாண் கடற்படையுட் காவலனை யாண்டொழியப்
போய்ம்மா மயிலூர்ந்து போகிப் புறங்காட்டுள்
விம்மாந்தி யான்வீழ வீழ்ந்தேன் றுணையாகி
எம்மானே தோன்றிஞய் என்னை யொளித்தியோ ! '

' மின்னிரைத்த பைம்பூண் விளங்கிலை(ய) வேல்வேந்தன்
முன்னுரைத்த மூன்று கனவும் புணையாக
என்னுயிரைத் தாங்கி யிருந்தேன் வலியாகா
தென்னரசே யென்பூசல் கேளா திறந்தனையே '

' கந்தார் களியானைக் காவலனுர் கான்முளையை
வந்தார்வாய்த் தீதின்மை கேட்டு மறைந்திருந்து
நோந்தேன் பலகாலும் நோயோடே வீகின்றேன்
அந்தோ ! அறனே ! மற் றுற்றேனுல் ஆற்றேனுல் '

என்று கதறி மீண்டும் கீழே விழுந்தாள். பின்னர்ச் சீவகன் தோழர் தட்பஞ் செய்ய உணர்ச்சி பெற்றுள்.

அதன்பின், சீவகன் ஒரு தேவனுற் கொண்டுபோகப்பட்டு உய்ந்தான் என்றும் அவன் ஏமமாநகரில் வாழ்கின்ருன் என்றும் கூறி, தாங்கள் அவனைக் காண்டற்பொருட்டுச் செல்வதனையும் தெரிவித்தனர். கேட்ட விசயை உள்ளம் மகிழ்ந்து, தன் வரலாறெல்லாஞ் சீவகனுக்குணர்த்தி அவனைத் தன்பால் அழைத்து வருமாறு கூறி விடுத்தாள்.

இவ் வரலாற்றில் விசயை தன் மகனது நலனைக் கருதி இறைவனை வழுத்துதல் பூசனை செய்தல் முதலியன நிகழ்த்தி வந்தாளாகலின் அவளுள்ளத்தில் வாத்ஸல்யம் என்னும் பாவம் நிலைத்திருந்தது. ஆகலின் அவன் வரலாற்றைக் கேட்க நேர்ந்த போது அதில் ஆவல் (ஹர்ஷம்) மிக்கது. அந்நிலையில் அவனைத் தோள்யாத்துக்கொண்டுபோய்க் கொல்ல என்னுஞ் சொல் கேட்ட வளவில் சோகம் உண்டாயிற்று. சோகத்தால் இடியேறுண்ட நாகம்போல் வீழ்ந்து மூர்ச்சித்தாள். அதனுல், மேற்குறித்த அனுபாவங்களையும் உன்மாதம் மரணம் முதலிய சஞ்சாரிபாவத்தையும் அடைந்தாள். தான்பட்ட இன்னல்களையும் கணவன் கொலையுண்டதனையும் மகன் பொருட்டுத் தான் உயிர்வாழும் நிலையையும் பகைவன் தன் மகனையும் கொன்றதனையும் நினைக்கநினைக்கச் சோகம் நிலைபெற்றதாகலின் கருணரஸமாயிற்று. (தொடரும்)

வாழும் வழி

திரு. K. மருதப்பிள்ளை அவர்கள், குத்தாலம்.

(மலர் 19 இதழ் 4 பக்கம் 219 இன் தொடர்ச்சி)

11. ஒருவன் ஒரு விருத்தியினால் சொற்பப்பொருள் சம்பாத்தியம் செய்ததாய்த் தோன்றினதும், எல்லோரும் அதே வேலையில் முயன்று, அவனையும் கெடுத்துத் தானும் கெட்டுப் போகிறார்கள். அவ்விதம் எல்லோரும் வறியராவதைப் பார்க்கிலும், ஒவ்வொருவரும், வெவ்வேறு முறையில் சம்பாதிக்க முயலவேண்டும்.

12. இந்தச் சரீரம் நிலையில்லாதது. இந்தக் கொடுமையான காலத்தில் இன்று இருப்பான், நாளை இல்லையென்பதும் உண்டு. தன்னால் உள்ள கொடுக்கல், வாங்கல் விஷயம், வீட்டு விஷயம், நில விஷயம், காரிய நிர்வாக அநுபவம், பிந்தி நடக்கும் அவாந்தரங்கள் விவகாரங்கள் இவைகளுக்குப்பரிகாரம் முதலியவைகளை யார் பார்த்தபோதிலும் நன்றாகப் புரியும்படி சரியானதகவல்கள் கிடைக்கும்படி ஒரே புத்தகத்தில் எழுதி வைக்க வேண்டும்.

13. மற்றொருவன் தன் நன்மைக்கோ, சம்பாத்தியத்திற்கோ, பிரயத்தனப்படும்போது நாம் வயிற்றெரிச்சல்பட்டு விக்கினம் செய்யலாகாது. பிறருக்குக்கேடு நினைத்தால் அக் கேடுதனக்கே சம்பவிக்கும். பணக்காரர், கௌரவஸ்தர்களால் எவ்வளவோ சகாயமுண்டு. எல்லோரும் ஸ்ரீமானும் கௌரவஸ்தர்களாகவும் ஆகிவிட்டால், அதில் சேர்ந்த ஏழைகளுக்குக்கூட நன்மையே சம்பவிக்குமாதலால், உன்னத பதவிக்கு வரத்தக்க மனிதருக்கு சகாயம் செய்து உற்சாகப்படுத்திவர வேண்டும்.

14. ரொக்கத்திற்குக் கொண்டால், கனிஷ்டபக்ஷம் 100க்கு 20 ரூபாய் மிச்சப்படும். கடனுக்கு உரு உள்ளதும் அளவு, குறைவு உள்ளதும் ஆனவைகளை உண்டு உடம்பைக் கெடுத்துக்கொள்வதைப் பார்க்கிலும், கடனில்லாமல் கஞ்சி குடிப்பதே நல்லது. முயற்சியில்லாமல் கடன்வாங்க அகத்தியம் நேர்ந்தால், புத்தகம் வைத்து அதில் எழுதி வாங்கிவரவேண்டும். சில்லரைக்கடனை மாதத்திற்கு ஒரு முறையும், மொத்தக் கடனை

வருஷத்திற்கு ஒரு முறையும் கணக்குப் பார்த்து அவர்கள் கையெழுத்துள்ள பட்டியல் தரவேண்டும்.

15. வீடுகளில் அவரவர்கள் வைத்ய சாமான்கள், மாடு, கன்று தேகஸ்திதி, எட்டி இருக்கப்பட்ட நிலங்களின் ஸ்திதி இவைகளைப் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையாகிலும் நேரில் சென்று பார்த்துவர வேண்டும்.

16. முக்கியமான தஸ்தாவேஜுகள், நகை, நாணயம் இவைகள் வைக்கப்படும் இடங்கள், வீட்டில் இரண்டோரு முக்கியஸ்தர்களுக்கே தெரிந்திருக்க வேண்டும்.

17. வேலைக்காரன் எவ்வளவு நம்பிக்கையுள்ளவனாக யிருந்தாலும் அவருக்கு அதிகாரம் கொடுத்து, நிகா கம்மியா யிருந்தால், சத்தியவாதிக்கும், மனது மாறுதலுண்டாகி, விவேகக் குறைக்குக் காரணமாகிறது.

18. ஊரில் பரஸ்பரம் யாருக்கு கலகக்காரர்கள் உண்டான போதிலும் நமது சம்பந்தமிருந்தாலும், இல்லாவிட்டாலும் கோர்ட்டுக்குப் போகாமல் ஸர்வப்ரயத்தனத்தினாலும், ராஜிசெய்ய எத்தனப்படவேண்டும்.

19. எந்தக் காரியமாயிருந்தாலும் ஆகுமோ, ஆகாதோ என்ற அனுமானத்தினால், அமோகமான ஆயுளை விருதாவில் கழிக்காமல், வேலை செய்து வந்தால் சாத்திய மில்லாததுகூடச் செய்யும்படி நேரிடும்.

20. தன் வேலைக்கு முந்தியே யாராரினால் என்ன விக்கினம் நேருமென்பதைப் பிரத்யக்ஷணத்திலும் யோசித்து அதில் தப்பும் வழி முந்தியே தேடிக்கொள்ள வேண்டும்.

21. கொய்னா பேதி மாத்திரை, ரக்ஷகாய மருந்து, குளோரபின், பாய்சன் கிலர், நீலகிரி தைலம், அமிர்தாஞ்சனம் இவைகள் ஒவ்வோருவரிடமும் இருக்க வேண்டும். கொடுக்கும் விதமும் ஒவ்வோருவருக்கும் தெரிந்திருக்கவேண்டும்.

(தொடரும்)

கம்பராமாயணக் கலக்கமும் தெளிவும்

பெருஞ்சோற்கொண்டல், முத்தமிழ் வள்ளல்
புரிசை, திரு. சு. முருகேச முதலியார் அவர்கள்

(மலர் 19. இதழ் 4. பக்கம் 211 இன் தொடர்ச்சி)

1. தசரதன் உயிர்நீத்தது ஏன் ?

மேற்கூறிய காரணங்களால் மன்னவன் உயிர்நீத்தது மகனைப்பிரிய நேர்ந்த வருத்தம் ஒன்றுலல்ல; தனது காலத்தில் தமது குடிமையின் கோற்றம் சிதையக்கூடாது, மரபும் வாய்மையும் மங்குதலாகாது. தானே மங்குதலெய்தலே தகுதி எனக் கொண்ட விழுமியகோள்கைக்காகவேயாகும் என்பதுகிடைத்தது. இதனைக் கம்பர் பல இடங்களில் குறிப்பாகவும் சில இடங்களில் தெற்றென விளங்கவும் செப்பியிருக்கின்றார். கான்புகுந்த நம்பிக்குத் தேரோட்டிச் சென்று திரும்பினன் சுமந்திரன். அப்பெருந் தேர் வரவுகண்டு மன்னவனை விட்டு வெளிவந்தான் மாதவன். வந்த முனிவனை வணங்கிய சுமந்திரன் நடந்தன யாவும் நவின்றனன். அச்சேய்திகேட்ட அருந்தவன் அரசன் இருக்கும் இயல்பை அமைச்சனுக்கு உணர்த்துதலுற்றனன். மன்னவன் மகனைப்பிரியமாட்டாமல்வருந்தியழுகின்றான்; அவன் ஏது உனது செய்தியைக் கேட்டவுடனே இறந்துவிடுவான் என்று உரைத்தனன் மாதவன். மன்னன் தனது உயிரை விடத் துணிந்துநிற்கின்றான். அவன் உயிர்போகாமல் காக்கத்தக்க ஒன்றையும் அரசன் உளங்கோள்ளமாட்டான். அப்படி யான் தடுப்பதானுல் அதனுல் பழிவளருமேன்பது உறுதி. பண்பைக் காத்துப் பழியையும் தனது உயிரையும் மாய்க்கவிருக்கும் தருமத்தின் உறுதியாளனை யாம் தடுப்பதேங்ஙனமேன அஞ்சுகின்றேன் என்செய்வேன் எனக்கூறி ஏங்கிக்கோண்டே மன்னவன் பால் வந்தனன் எனக்கூறுகின்றார் கம்பர். அறத்தை நிலைநாட்டும் அந்த ஆணித்தரமான அருங்கவியை நோக்குங்கள் :-

"நின்றுயர் பழியைநோக்கி நேர்ந்திலன் தடுக்க-வள்ளல்
ஒன்றும்யான் உரைத்தல் கேளான்தருமத்தின் உறுதிபார்ப்பான்
வேன்றவர் உளரேமேலை விதியினை என்று விம்மிப்
போன்றிணி மன்னன் கோயில் சுமந்திரனேடும் போனுன்."

(தைலமாட்டுப்படலம் 56.)

இங்கு வள்ளல் என்ற பெயர் யாரைக் குறித்தது. தசரதனையா? இராமனையா? இராமனையென்று கொண்டே, இராமனுக்கு யான் சொல்லியும் பார்த்தேனே. நீ கான்புகாதே உன்னைப் பிரிந்து மன்னன் வாழமாட்டான் என்றென்று எவ்வளவு சொல்லியும் அவன் தருமத்தைப் பேணவேண்டுமெனத் தாய்ச் சொல் தலை மேற்கொண்டு சென்றுவிட்டனனே என வசிட்டர் வருந்தினர் எனப் பொருளுரைத்து இப்பாடலை வெறும்பாடலாக்குவாரும் உளர். இப்பாடலில் வரும் வள்ளல் என்ற சொல் இராமனைக் குறித்ததாக அவர்கள் கொள்கின்றனர். ஒக்கும். சொல்லொக்கும் பொருளொவ்வாதால் என்பர் கம்பரே. வள்ளல் என்றது இங்கு தசரதனையே குறிக்கும், இராமனையும் கம்பர் வள்ளல் என்று பல இடங்களில் இயம்புகின்றார். அவற்றுள் தலைசிறந்த இடம்,

"ஆளையா உனக்கமைந்தன மாருத மறைந்தப்
பூளையாயது கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளைவாவென நல்கினன் நாகுஇளங்கமுகின்
வாளை தாவுறும் கோசல நாடுடைவள்ளல்"

என்ற இடமே என்னலாம். சூழ்படையும் தொடுபடையுந் தொலைந் தொழிய, விழுதுடை ஆல்போல் வெறுங்கை தொங்கநின்ற இராவணனை, அம்பொன்றேவி ஆருயிர் கவரவல்ல ஆண்டகை யான இராமன் வெறுங்கையாளனை வதைத்தாலாகாதென்ற வித்தகங்கருதிய உத்தமனாகி இன்று சென்று நாளைவாவென உயிர் வழங்கிய இடம் இது ஆதலால், இராமன் இங்கு வள்ளலா கின்றான். இந்த வள்ளன்மை அவன் உயிரையே அவனுக்கு வழங்கிய வள்ளன்மையேயாகும். ஆனல் தசரதன் வள்ளன் மையோ தனது இன்னுயிரையே அறங்களிரண்டிற்காகப் பகிர்ந்தளித்த வள்ளன்மையாகும். இந்த வள்ளற் பட்டத்தை இராமனோடெதிர்த்துவாதாடத் தலைப்படும் வாலிவாயில் வைத்து தசரதப் பெருந்தகைக்குச் சூட்டி மகிழ்கின்றார் கம்பர்.

"வாய்மையும் மரபும்காத்து மன்னுயிர் துறந்தவள்ளல்
தூயவன் மைந்தனே நீ பரதன் முன்தோன்றினயே
தீமைதான் பிறரைக்காத்துத் தான்செய்தால் தீங்கன்றாமோ
தாய்மையும் அன்றிநட்பும் தருமமுந்தழுவி நின்றேய்"

வாலி வதையில் 76-ஆவது செய்யுளாக வரும் இதுவே, தைலமாட்டுப்படலத்தில் வந்த 56-ஆவது செய்யுளாகிய பூட்டிற்குத்தக்க திறவுகோலாகும். இப்போது அங்கு வந்த

வள்ளல் இராமனா? தசரதனா? என்பதை உன்னுவோம். தசரதன் தான் அல்லவா? அப்பாடலை இங்குச் சொல்சொல்லாக ஆயலாம். நின்று உயர் பழியை நோக்கி நேர்ந்திலன் தடுக்க - இதுயார் சொன்னது? சுமந்திரனுக்கு வசிட்டமாதவன் சொன்னது; யான் என்றும் சுமந்திரா என்றும் இருசொற்களை வருவித்துக் கொள்ளவேண்டும். அப்படிக் கொண்டால், ஏ சுமந்திரா! யான் தடுக்க நேர்ந்திலன். ஏன் தெரியுமா? நின்று உயர்பழியைஅஞ்சி. இந்த சூரியன்மரபோர் ஒருவரையுஞ் சாரத கொடும்பழி அரசனை அடையவரும் காலம் இது. இன்று வரவிருக்கும் பழியோ என்றுந் தொலையாமல் நிலைத்து நிற்பதே யன்றி வளரவும் தக்கது. இது, நின்று உயர்பழி. ஒருக்கால் நான் தடுத்து மன்னனை உயிர்காக்க முற்படுவேனாயினும் அரசன் அதனை ஒப்புக்கொள்வானல்லன். அவன், ஒன்றும் நான் உரைத்தல் கேளான். ஏன்? தருமத்திற்கு உறுதிபார்ப் பான். தருமத்திற்கு உறுதிசெய்யவே தனக்கு இறுதியைத் தானே மேற்கொள்கின்றான் அரசனாதலால் என்றும் என் சொல் கடவாத அவன் இன்று என் சொல்லைக் கேட்கமாட்டான். அரசனை அறத்தின் வழி நிறுத்தத்தக்கனவே யான் சொல்லக் கடமைப்பட்டவனாதலால், யான் உரைத்தலும் நேர்பாகவில்லை. அரசன்மாட்டு அன்பால் யான் ஒருக்கால் மயங்கி உரைப்பினும் அவன் கேட்கும் கீழ்மையில் இல்லை. சலபோசன் சாபத்திடை யிலும் நுழைவதற்கு வழியுண்டு. அது நமக்கேயன்றி மன்னவ னுக்குந் தெரியும். ஆனால், அச்சாபத்தை மேற்கொண்டு அதன்வழி உயிர்நீத்தலைப் பழிநீக்கம் பெறவும், அறம் ஆக்கம் பெறவும் மன்னவன் கடைப்பிடித்திருக்கின்றான். ஆதலால் இது தடுக்கவுங்கூடாதது. வருந்தாமலிருக்கவுங்கூடாதது. வெவ்வினைகள் யாவரையுந் துன்புறுத்துந்தகையன. என்செய் வோம் என மாதவன் வருந்தினன் என்ற சிறந்த கருத்துக்கள் இங்குக் காணக்கிடைக்கின்றன அல்லவா? (தொடரும்)

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

தீட்டுக் குரியவர் செத்தானைச் சேர்ந்தவர் செப்புமுத்தி
வீட்டுக்குரியவர் மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தவர் வேட்டைவினை
யாட்டுக்குரியவர் மன்னரைச் சேர்ந்தவர் அம்புவியிற்
கேட்டுக்குரியவர் கூத்தாடச் சென்றவர் கேளணங்கே. 63

இரண்டாம் இராசாதிராசனது : :
: : திருவொற்றியூர்க் கல்லெழுத்து

சிவநேறிச்சேல்வர்.
வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.,
பிரின்ஸிபால், சேந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

இரண்டாம் இராசாதிராசன்

இரண்டாம் இராசராச சோழனுக்குப்பின் பட்டம் எய்திய சோழவரசர்; விக்கிரமசோழனது பேரராகிய நேறியுடைப் பெருமாள் என்பவருடைய மகனுர்; எதிரிலிப் பெருமாள் என்பது இவரது இயற்பெயர். இரண்டாம் இராசராசன், தனக்குப்பின் பட்டம் எய்துவதற்குரிய ஆண்மக்கள் இல்லாமையின் இவ் வேதிரிலிப் பெருமாளை இளவரசாக்கினுர். 1163-ல் இவர் முடிசூட்டப்பெற்றபோழுது இராசாதிராசன் என்று அபிஷேகப் பெயர் பேற்றுர்; 1178 வரை இவர் அரசு செலுத்தினுர்.

கல்லெழுத்து நுதலியபொருள்

இரண்டாம் இராசாதிராசன் தம் 9-ஆம் ஆட்சியாண்டில் திரு வோற்றியூர்க்குச் சேன்றிருந்தார். அப்போழுது திருவோற்றியூர் இறைவற்குப் பங்குனியுத்திரப் பெருவிழா நடந்துகோண்டிருந் தது. அத்திருவிழாவின் ஆரும் திருநாளான புதன்கிழமையும் ஏகாதசியும் பேற்ற ஆயிலியநாளில் படம்பக்கநாயகதேவர் திரு மகிழின்கீழ் எழுந்தருள்விக்கப்பேற்றுர். இராசாதிராசதேவரும் அப்போழுது அக்காட்சியைக்காண எழுந்தருளினுர். அங்கு அரசனேடு மடமுடைய சதுரானன பண்டிதன், மாகேசுவரக் கண்காணி திருவீதி வேயிடம்கோண்டான், ஸ்ரீ காரியம் அரியபிரான்பட்டன், சோமசித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதன், காலும் பிடாரும் சேயங்கோண்ட சோழமண்டலப் பிடாரன், திருவோற்றியூர்ப்பிச்சன், கோயில் நாயகம் படம் பக்க நாயகபட்டன், கோயில் கணக்குத் திருவோற்றியூருடையான் உறவாக்கினுன் ஆகியோர் வந்திருந்தனர். இறைவன் திருமுன் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் படிக்கப்பேற்றது; எல்லோரும் புராணத்தைக் கேட்டுக்கோண்டிருந்தனர். அப்போழுது ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பேற்றது.

திருவோற்றியூர்ப் பெருமானுக்குரிய தேவதானங்களில் வடுகப்பெரும்பாக்கம் என்பது ஒன்று. காணியாளர் இன்றி நெடுங்காலம் அவ்வூர் நிலங்கள் பயிரிடப்பெறுதிருந்தன. இக் கோயிலுக்குரிய ஊர்களில் இரணையூர் என்பது ஒன்று. அவ்வூரில் அமுதங் கிழவன் பேரியான் சோமன் என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு இவ்வடுகப்பெரும்பாக்கத்துக் காணி யுரிமையைக் கொடுக்க என்று அரசர் உத்தரவிட்டார். அங்ஙனமே அன்றுடு நற்காசு நூற்றிருபதும் ஸ்ரீ பண்டாரத்தில் சோமன் சேர்ப்பித்தான், இனி ஸ்ரீ பண்டாரம் இறையிறுக்கவேண்டும். அமுதங்கிழவன் சோமனும் அவன் வம்சத்தாரும் விற்றுற்றி பிந்திக் கிரயத்துக்குரித்தாவதாக இந்நிலம் விற்றுக் கொடுக்கப் பெற்றது.

பொது

இக்கல்லெழுத்து 1896-ம் யாண்டில் 403-ம் எண்கொண்ட கல்வெட்டாகவும், 1911-ம் யாண்டில் 371-ம் எண்கொண்ட கல்வெட்டாகவும் படியெடுக்கப்பெற்றது. இதனைக் குறித்து 1912-ம் ஆண்டில் வெளியிட்ட கல்வெட்டுத்துறை அறிக்கையில் பக்கம் 67, 68-ல் எழுதப்பெற்றுள்ளது. பேராசிரியர் திரு. K. A. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் 'சோழர் வரலாறு' பாகம் II-லும். Dr. இராசமாணிக்கனுருடைய 'பெரியபுராண ஆராய்ச்சி' என்ற நூலில் பக்கம் 30-31 லும், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள் அவர்கள், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நிறுவியுள்ள நூல்வெளியீட்டு நிதிப் பதிப்பாகச் சித்தாந்த [கலாநிதி திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்த 'ஞானமிர்தம்' என்ற நூலின் முற்பகுதியில் ஆராய்ச்சியில் XXI - XXVIII, XXXIV - XXXVIII பக்கங்களிலும், இக்கல்லெழுத்தைப்பற்றி எழுதி யுள்ளார்கள். அண்மையில் வெளிவந்த தென்னிந்தியக் கோயில் சாஸனங்கள் பாகம் I-ல் 516-வது எண்ணுகவும். பாகம் II-ல் பிற்சேர்க்கை VI-ல் பக்கம் XVII-லும இக்கல்லெழுத்துக் குரிய குறிப்புக் காணப்பெறுகிறது.[1] இக்கல்லெழுத்து திரு வோற்றியூரில் ஆதிபுரீசுவரர் கோயில் இரண்டாம் பிராகாரத்துக் கிழக்குச் சுவரில் உள்ளது.

---

[1] இந்நூலில் இக்கல்லெழுத்துக்குரிய அரசன் இராசராசன் என்று காணப்பெறுகிறது ; இதற்கு ஆதாரம் தரப்பெறவில்லை.

இக்கல்லெழுத்தின் காலம்

இக்கல்லெழுத்து இரண்டாம் இராசாதிராசனுடைய 9-ஆம் ஆட்சியாண்டில் கொடுக்கப்பட்டது. இவன் பட்டம்பெற்ற யாண்டு 1163; எனவே இக்கல்லெழுத்து கி. பி. 1172-73க் குரியது என்னலாம்.

சதுரானன பண்டிதன்

படம்பக்க நாயகதேவர் திருமகிழின்கீழ்த் திருவோலக்கம் செய்தருளியிருந்த சமயத்தில் போந்திருந்தவர்களுள் சதுரானன பண்டிதன் என்பாரும் ஒருவர். இவர் திருவொற்றியூரிலிருந்த ஒரு மடத்தின் தலைவர் ஆகலின் மடமுடைய சதுரானன பண்டிதன் எனப்பெற்ருர்.

திருவொற்றியூரில் பல மடங்கள் இருந்தன.[2] அவற்றுள் ஒரு சைவ மடத்துக்குத் தலைவராய் இருந்தவர் நிரஞ்சன தேவர் எனப்பெற்ருர். பல்லவ அரசனை மூன்ரும் நந்திவர்மனின் (கி. பி. 825-50) மகனை கோவிசயகம்பவர்மனின் 19-ஆவது ஆட்சியாண்டில் இந்நிரஞ்சன தேவர் திருவொற்றியூரில் சிவன் கோயில் ஒன்றை எடுப்பித்தார்; அதற்கு நிரஞ்சனதேவேச்சரம் எனப் பெயரிட்டார்.[3]

இந்நிரஞ்சன தேவர்க்குப்பின் மடத்து அதிபராய் வந்த வருள் ஒருவர் சதுரானன பண்டிதர் என்ற பெயருடையவர். இவர் முதற்பராந்தக சோழனது (907 - 953) இறுதிக்காலத்தில் இருந்தவர். இவர் கேரள நாட்டினர்; இராட்டிரகூட அரசனுகிய

[2] சதுரானன பண்டிதர் மடம் 401 of 1896 (S. I. I. V 1356 Same as 130 of 1912), 405 of 1896 (S. I. I. V 1360 Same as 206 of 1912), 177 of 1912, 181 of 1912, 399 of 1896 (S. I. I. V. 1354 Same as 104 of 1912), 105 of 1892 (S. I. I. IV 553 Same as 126 of 1912; செல்வத்திருவாரூர் கீழைமடம்) S. I. T. I. vol I 524; கீழை மடம் 207 of 1912, S. I. T. I. vol I No. 508; செட்டிகள் மடம் 203 of 1912 S. I. T. I. vol I 522; பிக்ஷா மடம் 212 of 1912 S. I. T. I. vol I 525; ராஜேந்திரசோழன் மடம் 107 of 1892 S. I. I. vol Iv 555; குலோத்துங்கன்சோழன் மடம் 200 of 1912; திருஞான சம்பந்தர் மடம் 238 of 1912; நந்திகேசுர மடம் 239 of 1912.

[3] 372 of 1911; S. I. I. vol XII No. 105.

மூன்றும் கிருஷ்ணனுக்கு மிகவும் வேண்டியவர்; இளமையில் பல கலைகளை நன்கு கற்றார்; பின் சோழநாட்டிற்குப்போந்து முதற் பராந்தகனுடைய மகனுகிய இராசாதித்தனுக்கு உற்ற நண்பரானார்; அவ்விராசாதித்தற்குக் குருவாகவும் சாமந்தராகவும் இருந்தார்; எனினும் இராசாதித்தன் போரில் இறந்தபோழுது உடன் இறக்க முடியாதவரானார். இதனால் இவர் மனம் நோந்து, உலக வாழ்வை வேறுத்தார்; கங்கை நீராடினார்; ஆதிக்கிராமத்தில் (திருவோற்றியூரில்) இருந்த நிரஞ்சன குருவிடம் விரதம் (துறவு) பூண்டு மாவிரதியானார்[4]; நிரஞ்சன தேவர்க்குப்பின் இச்சதுரானன பண்டிதர் மடத்து அதிபதியானார். இராசாதித்தனிடம் சேனாபதியாக இருந்த கேரளன் வேள்ளங்குமரனே தக்கோலத்துப் போருக்குப் பிறகு துறவியானார் என்று ஒருசாரார் கூறுவர். மேலே குறிப்பிட்ட மூன்றும் கிருஷ்ணனாகிய கன்னர தேவனது 20-ஆவது ஆண்டுக் கல்லெழுத்து (கி. பி. 960) நூறுநிஷ்கா[5] போன் கோயிலில் பலிக்காகத் தந்ததைக் கூறுகிறது. தான் பிறந்தநாளாகிய தனிஷ்டா (கேட்டை) நாளில் சிறப்பாக வழிபாடு நடத்துதற் போருட்டு இத்தருமம் அளிக்கப்பேற்றது. மான்ய கேதத்தில் இருந்த வியாபாரி ஒருவன் மூன்றும் கிருஷ்ணனுடைய காடகத்துள்ளவன்; நஞ்சிப்பையன் என்ற பேயரினன்; திருவோற்றியூர் இறைவர்முன் ஒரு நந்தாவிளக்கு எரிக்க 30 ஊர்காற் சேம்மைப்போன்[6] சேற்றுப்பேட்டு[7] ஊரவரிடம் கோடுத்தான். இச்சதுரானன பண்டிதர் கிருஷ்ணனுடைய 19-ஆவது ஆட்சி ஆண்டில் இத்தருமத்தை நடத்த ஏற்றுக்கோண்டார்.[8]

---

[4] 181 of 1912; மூன்றும் கிருஷ்ணனுடைய 20-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு.

[5] நிஷ்கா ஒரு கழஞ்சுக்குச் சமானமானது (S. I. I. III 104)

[6] ஊர்காற் சேம்மைப்போன் - உருகாச்சேம்போன் - சேம்போற் கட்டி: ஊர் போதுவாக உள்ள நிறைக்கும் உரைகல். மாற்றுக்கும் சமமானது (P. 1406 of S. I. T. I. vol III Part II).

[7] சேற்றுப்பேடு - சேன்னை எழும்பூர் இரயில் நிலையத்துக்கு இப்பால் உள்ள இரயில் நிலையம் உள்ள ஊர்.

[8] 177 of 1912; A. R. E. 1913 II 17; K. A. N. Cholas vol II Pages 496 - 7.

திறன் ஆய்வு :

தருமையாதீன வெளியீடுகள்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 19 இதழ் 4 பக்கம் 203 இன் தொடர்ச்சி)

எண் 7. வருணாசிரமசந்திரிகை (வடமொழி)

இயற்றியவர் :- தருமையாதீனம் 7 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். வெளியிட்டோர் :- 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் ஆணைப்படி நாராயண சாஸ்திரிகளால் ஆராயப் பெற்று வித்துவான், ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள் மேற்பார்த்து கார்பார் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் வெளியிடப்பெற்றது.

ஸ்ரீ திருவம்பல தேசிகர் : வடமொழி தென்மொழிகளில் வல்லவராய் விளங்கியவர்கள். இவர்கள் மாயூரம் மூவலூரில் ஆடூர்ப் பாக்கியத்துச் செட்டியார்களுள் சுப்பராயச் செட்டியார் அவர்கள் தாயார் இறந்தபோது அவர்களுக்கு மோக்ஷமளிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்ய அவ்வுயிர்க்குத் தீக்ஷை செய்வித்து மோக்ஷமளித்தார்கள். காவிரிப்பூம்பட்டினத்திற்குக் கடலாடச் சென்ற மன்னன் முதற் குருமூர்த்திகள் திருக்கோயில் மணியோசை கேட்க, ஊர்தியினின்றும் இழிந்து வணங்கிப் புறப்பட்டான். அருகிலிருந்தவர் சூத்திர சந்நியாசி கோயில் வணங்குதல் ஆகாது என்றும் இக் கோயிலை இடித்துவிடுதல் வேண்டுமென்றும் கூறினர். மன்னனும் அதற்கு இசைந்து இடித்துவிட உத்தரவிட்டான். ஏவலர் இடிக்கும் இடந்தோறும் இரத்தம் பீறிட்டது. எல்லோரும் மூர்ச்சையுற்றனர் ; ஊமையாயினர். செய்தி தெரிந்த மன்னன் மீளவந்து வணங்கிப் பிழை பொறுக்க வேண்டினன். குருமூர்த்திகளும் மன்னித்து அருள் வழங்கினார்கள். தருமையின்தென் கீழ்த்திசையில் கூடாரம்

இட்டுக்கொண்டு மன்னன் குருமூர்த்திகளிடம் சூத்திரர்களுக்குச் சந்நியாசம் பெற அதிகாரம் இருப்பதைத் தெரிவிக்கவேண்டும் என்று விண்ணப்பிக்க அவ்வாறு ஆகம வேதப் பிரமாணங் களோடு இந்நூலைச் செய்து விளக்கியருளினார்கள். மன்னன் மனமகிழ்ந்து குருநாதர்தம் திருக்கோயிலுக்கு அர்த்தயாம வழி பாட்டிற்கு நிலங்கள் பலவற்றை நிவந்தமாக்கி விடைபெற்றுக் கொண்டான். காலம் 17 ஆம் நூற்றாண்டு.

வருணாசிரமசந்திரிகை : ஆதீனப் பண்டாரசாத்திரங் களில் ஒன்று. வடமொழியில் எழுதப்பட்ட நூல். இந்நூலில் நான்காம் வருணத்தார்க்கும் சந்நியாச ஆஸ்ரமம் உண்டு என்ப தைச் சுப்பிரபேதம், காமிகம், அஜிதம், காலோத்தரம் முதலான ஆகம வசனங்களைக்கொண்டு எழுதப்பட்டது. குருத்துவம் நான்கு வருணத்தார்க்கும் இல்லறந் துறவறம் ஆகிய இருவகை நிலையிலும் உண்டு என்பதை மேற்கோள்களுடன் நிறுவுகிறது. இந்நூலுள் வித்துவான், ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமி களால் நாற்பதுபக்கத்தில் ஒரு தமிழ் மொழிபெயர்ப்பு நூல்நுவல் பொருளைச் சுருக்கி எழுதப்பெற்றுள்ளது. இந்நூலுள் அதிகார நிருபணம், அதிகாரநிர்ணயம் என்ற வேறு இரு தொகுப்பு நூல் களும் சேர்த்து அச்சிடப்பெற்றுள்ளன. அறுநூற்றுப்பன்னிரண்டு சுலோகங்கள் கொண்டது வருணாசிரமசந்திரிகை. அதிகாரநிரு பணம் நூற்றறுபத்துநான்கு சுலோகங்களை உடையது. அதிகார நிர்ணயம் தொண்ணூற்றைந்து சூத்திரங்களைக் கொண்டது.

எண் 8. சிகாரத்தினமாலை

இயற்றியவர் :- ஸ்ரீ சம்பந்தசரணாலய முனிவர். வெளி யிட்டோர் :- தருமையாதீனம் 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமி களவர்கள் ஆணைப்படி சீகாழி வித்துவான், திரு. ப. அ. முத்துத் தாண்டவராயப் பிள்ளை அவர்களால் வெளியிடப்பெற்றது. முதற் பதிப்பு 1930.

ஸ்ரீ சம்பந்தசரணாலயர் : இவர்கள் ஆறாவது குருமூர்த்திகள். ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடத்தில் உபதேசம் பெற்றவர்கள். ஸ்ரீ வெள்ளியம் பலவாணத் தம்பிரான் சுவாமிகளிடத்தில் கல்வி பயின்றவர்கள். இவர்களது கல்வியறிவின் திறமையை அறிந்து மைசூர் மன்னன்

இவர்களை அழைத்திருந்தான். சுவாமிகளின் திருவுருவைக் கண்ட மன்னன் அண்டங்காக்கைபோல் உளரே என்றனன். சுவாமிகள் தாமே அண்டங்காக்கைக்குப் பிறந்தவர் என்று கூறினர். மன்னன் இவர்களது சொன்னயம் கண்டு மகிழ்ந்தனன். கந்தபுராணத்தைச் சுருக்கி ஒரு நூல் செய்தார்கள். அரசன் அளித்த பொருள்களை குரு, சிவம், அடியார்க்குரிமை யாக்கினர். சுவாமிகளை மன்னன் நகர்வலம் செய்வித்துச் சிறப்பித்தான். சொக்கநாதப்பெருமானுக்கு அபிஷேகப் பொருள்கள் அளித்துவந்தான். மீண்டும் தருமை அடைந்து ஸ்ரீ குருஞான சம்பந்தர் மீது சிகாரத்தினமாலை என்ற தோத்திர நூல் அருளிச் செய்தார்கள்.

சிகாரத்தினமாலை : முடிமணி போன்ற குருநாதர்மேல் செய்யப்பட்ட பாமாலை எனப் பொருள்படும். தமது ஞானசாரியரது வல்லமை விளங்கப் பாடிய பதினொன்று விருத்தப் பாடல்களைக் கொண்டது. மூன்றும் பாடல் தம் குருநாதர் கமலை, தருமை, கூடல் மூன்று நகர்களிலும் அரசு வீற்றிருக்கும் சிறப்புக் கூறுகிறது. ஆகம புராணங்கள் முதலிய கலைகள் எல்லாம் குருநாதர் புகழ் விரிப்பன என்றும் அறிஞர் போற்றுதல் வியப்பல்ல என்றும் குருநாதர் கருணையால் குயில், கிளி, பூனை, எலி முதலியன முத்திபெற்ற சிறப்பும் இந்நூலுள் ஓதப்படுகிறது.

எண் 9. திருப்பதிகமும் பஞ்சரத்தினமும்

திருப்பதிகம் இயற்றியவர் :- ஸ்ரீ சிதம்பரநாத முனிவர், பஞ்சரத்தினம் :- அந்தகக்கவி வீரராகவ முதலியார். வெளியிட்டோர் தருமையாதீனம் 23-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆணைப்படி, சீகாழி திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. முதற்பதிப்பு 1930.

சிதம்பரநாதமுனிவா :- பத்தாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் காலத்து விளங்கிய ஆதீன அடியவர். தக்கயாகப்பரணிக்கு உரைவகுத்தவர் இம்முனிவர் பிரான் எனக் கருதப்படுகிறது. சீகாழி அருணசலக் கவிராயர் குருவுடன் பூர்வாசிரமத்தில் உடன் பயின்றவர்கள். நித்ய கன்மநேறி என்னும் வெளியீட்டு வரிசையில் இவர் வரலாறு குறிக்கப்பெற்றது.

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை :
பீமசங்காரம் (டாகினி)

தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பீமசங்காரரை வழிபடுதல்

இராமேச்சுரம்

ஸ்ரீ இராமநாதர்

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை :
நாகேசம் (தாருகாவனம்)

தருமையாதீனம்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ நாகேசுவரரை வழிபடுதல்.

விஸ்வேசம் (ஸ்ரீ காசி)



தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ காசிவிசுவநாதரை வழிபடுதல்

திருப்பதிகம் : பத்தாவது குருமூர்த்திகளின்மேல் பாடப் பட்ட தோத்திரநூல். பத்து ஆசிரிய விருத்தங்களை உடையது. குரு தீட்சை பெற்றார் மனக்கலக்கமடையார் என்பதும் மெய் கண்ட நூல்களும், சாத்திர தோத்திரங்களும் திருவுருவெழுத்து வந்தாலொத்தது குருநாதர் திருவடிவம் என்றும் கூறுகிறது.

" சம்பந்த சரணால யன்பெரும் பாடலும்
தமிழாகரன் பாடலும்
தண்டமிழ்க் கவிவீர ராகவன் பாடலும
தருகுமர குருபர னெனும
கும்பமுனி பாடலும நிரம்பவழ கியபுலவர்
கொண்டாட வருபாடலும்
குலவும் படிக்காசுத் தம்பிரான் பாடலும்
கோடியடி யார் பாடலும்
கெம்பீர ஞானவா னந்தமுற அடியர்மேல்
கிருபா கடாக்ஷம் வைத்துக்
கிளர்மணித் தவிசினிற் கொலுவீற்றிருந்து நீ
கேட்குமப் பொழுதி லடியேன்
செம்பாக மில்லாத புன்கவி தைகூடத்
திருச்செவி சாத்தி யருள்வாய்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிகசம் பந்த குருவே." -திருப்பதிகம் பாடல் 11

அந்தகக்கவி வீரராகவர் :- செங்கல்பட்டு மாவட்டம் பொன்விளைந்தகளத்தூரில் பிறந்தவர். சைவவேளாளர் பிறப் பிலே அந்தகராகப் பிறந்து சிறந்த கவிவன்மை பெற்று விளங்கியவர். பல நாடுகளும் சென்று பாவலரும் காவலரும் போற்றத் திகழ்ந்தவர். பல தனிப்பாடல்களும் திருவாரூர் உலா முதலிய இலக்கிய நூல்களும் இயற்றியுள்ளார்.

பஞ்சரத்தினம் : எட்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள்மேல் பாடப்பட்ட நூல்; ஆறு விருத்தப்பாடல்களால் ஆகியது. இந்நூலின் ஐந்தாம் பாடல் பொருட் சிறப்புடையது.

" அகரஉயிர் அக்கரங்கட் கானுப்போல் ஆருயிர்கட் காகிஆரூர்
நகரமிசை வருஞான சம்பந்த தேசிகனே நாயினேன்றன்
சிகரமிசை யுனதுகரம் உறஇருத்தி மகரமறச் செய்தல் வேண்டும்
பகரும்அழ கியதிருச்சிற் றம்பலசம்பந்த புகழ்த் தருமை வாழ்வே"
(தொடரும்)

ஜோதிர்லிங்க ஸ்தலங்கள்

சிரோமணி, பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரி,
தருமபுரம்.

सौराष्ट्रे सोमनाथं च श्रीशैले मल्लिकार्जुनम् ।
उज्जयिन्यां महाकालमोङ्कारममलेश्वरम् ॥
परल्यां वैद्यनाथं च डाकिन्यां भीमशङ्करम् ।
सेतुबन्धे तु रामेशं नागेशं दारुकावने ॥
वाराणस्यां तु विश्वेशं त्र्यम्बकं गौतमीतटे ।
हिमालये तु केदारं घृष्णेशं च शिवालये ॥
एतानि ज्योतिर्लिङ्गानि सायं प्रातः पठेन्नरः ।
सप्तजन्मकृतं पापं स्मरणेन विनश्यति ।

ஸௌராஷ்ட்ரே ஸோமநாதம் ச ஸ்ரீசைலே மல்லிகார்ஜுனம்
உஜ்ஜயின்யாம் மஹாகாளம் ஓங்காரம் அமலேச்வரம் ||
பரல்யாம் வைத்யநாதம் ச டாகின்யாம் பீமசங்கரம்
ஸேதுபந்தே து ராமேசம் நாகேசம் தாருகாவனே ||
வாராணஸ்யாம் து விச்வேசம் த்ரயம்பகம் கௌதமீ தடே
ஹிமாலயே து கேதாரம் குஸ்மேசம் ச சிவாலயே ||
ஏதாநி ஜ்யோதிர் லிங்கானி ஸாயம்ப்ராத: படேந்நர:
ஸப்த ஜன்ம க்ருதம் பாபம் ஸ்மரணேந விநச்யதி ||

1. சோமநாதம்

சௌராஷ்டிர தேசத்தில் வீரவால் என்ற ஸ்டேஷனிலிருந்து சோமநாதரின் ஆலயமுள்ள இடமாகிய பிரபாஸபட்டினம் 3 மைல் தூரத்தில் உள்ளது. வைடூரியமணிபர்வதம் என்னும் குன்றின்மேல் சோமநாதர் ஆலயம் விளங்குகிறது. இங்குள்ள பெருமான் திருவுருவம் ஸ்படிகம்போலத் தூய்மையோடு விளங்கியதாகச் சொல்லுகின்றார்கள். இத் தலத்தில் பெருமானை வணங்கிப் பழம்பிறப்பறிந்து வந்தனர் முன்னோர். மகமதியர் ஆட்சியில் சிதைக்கப்பட்ட கோயில்களில் இதுவும் ஒன்று. பைரவசிலை என்னும் மலை அடிவாரத்தில் உள்ளது.

கிருஷ்ணன் வேடனால் அடிபட்டு, தேக வியோகமடைந்ததும் அவருடைய தேஹம் தகனம்ஆனதும் இவ்விடத்திலேயே. கிருஷ்ணனுடைய பட்டினமாகிய துவாரகை இங்கிருந்து 300 மைலில் உள்ளது. கஜினி முகம்மது பலதடவை இங்கே படையெடுத்து லிங்கத்தை யுடைத்து அதிலிருந்து உதிர்ந்த நவரத்தினங்களை அள்ளிச்சென்றான். இச்செயல் இந்தியாவில் ஆலயங்களில் ஏராளமான செல்வமுள்ளது என்பதை அறிந்துகொண்டு முகம்மதியர் மேன்மேலும் படையெடுக்கத் தூண்டியது. காலஞ்சென்ற வல்லபாய்பட்டேல் அவர்களால் நிறுவப்பட்ட ஒரு கமிட்டியின் மேற் பார்வையில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் திருப்பணி நடைபெற்று வருகிறது. இந்தோர் மகாராணி அவர்களால் முன்பு திருப்பணி செய்யப்பட்டது. கோட்டை ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. பூமிக்கு அடியில் பிரதான லிங்கம் உள்ளது மேல்புறத்தில் யாவரும் காணும்படி மற்றொரு லிங்கமும் உள்ளது, இப்போழுது நடைபெறும் திருப்பணிக்குத் தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் பொருள் உதவி அளித்துள்ளார்கள்.

சந்திரன் தன்னுடைய மனைவிகள் இருபத்தேழுவரையும் ஒரே வித அன்புடன் நடத்தாமையால் கோபம்கொண்ட சந்திரனின் மாமனார் தக்ஷன் க்ஷயரோகமடையும்படி சந்திரனைச் சபித்தான். அந்நோயால் துன்புற்ற சந்திரன் பிரபாச க்ஷேத்திரமடைந்து பத்துக்கோடி மிருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்து ஈசனைப் பூசித்தான். சந்திரனுக்கு அங்கு அருளிய மூர்த்தி ஸோமேசம் என்ற பெயருடன் விளங்குகிறார். இது சரித்திரப் பிரசித்திபெற்ற இடமாகும். இதற்கு மகாநதிதீரத்திலுள்ள அந்தகேச லிங்கம் உபலிங்கமாகும்.

2. மல்லிகார்ச்சுனம் (ஸ்ரீசைலம்)

தேலுங்கு தேசத்தில் குண்டக்கல் குண்டூர் பாதையில் நந்தியாலா ஸ்டேஷனிலிருந்து 70 மைல் மலைமேல் உள்ளதலம். ஆலயம் இப்போழுது நல்ல நிலையில் உள்ளது. இது தேவாரப் பாடல் பேற்றது. இதற்கு பிருகுபர்வத சமீபத்தில் உள்ள ருத்திரலிங்கம் உபலிங்கமாகும்.

விநாயகரும், முருகனும் விளையாடிக்கொண்டு இருக்கும் பொழுது பார்வதிபரமேச்வரர்கள் தங்களுடையபுதல்வர்களுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும் என்று பேசிக்கொண்டு இருந்தனர். இதைக்கேட்ட புதல்வர் இருவரும் தனக்கே முதலில் விவாஹம் செய்யவேண்டுமென விவாதம் செய்து கொண்டு இருந்தனர். சிவபெருமான் குமாரர் இருவரையும் அழைத்து உலகத்தைப் பிரதக்ஷிணம் செய்து முதலில் வருகிற வனுக்கு முதலில் விவாஹம் என்றார். முருகன் பூப்பிரதக்ஷிணம் செய்ய விரைந்தார். விநாயகரோ தாய் தந்தையரைப் பூசித்து ஏழுமுறை வலம் வந்து, "உங்களிருவரையும் ஏழு பிரதக்ஷிணம் செய்தது ஏழுமுறை பூப்பிரதக்ஷிணம் செய்ததாகும்" என சாஸ்திரங்கள் கூறுவதால் எனக்கு மணம் முடிக்கவேண்டு மென வேண்டினார். அவ்விதமே விசுவருபன் மகளான சித்தி, புத்தி இருவரையும் மணம் செய்வித்தார். சிறிது காலம் கழித்துப் பூப்பிரதக்ஷிணம் செய்துவந்த முருகன் நடந்ததைக் கேட்டு நாரதருடைய வாக்கியத்தினால் கோபமடைந்து, கிரௌஞ்சகிரிக்குச் சென்றார். அங்கே குமாரப்பிரம்மசாரி என்ற பெயருடன் விளங்குகிறார். முருகனின் பிரிவாற்றாமையால் பார்வதியும் பரமசிவனும் கிரௌஞ்சகிரிக்குச் சென்றனர், தந்தை யாரின் வருகை உணர்ந்த முருகன் வேறிடம் செல்ல முயன்றார். ஆனால் தேவரின் வேண்டுகோளுக்கு இரங்கி மூன்று யோசனை தூரத்தில் தங்கினார். பார்வதியும் சிவபெருமானும் தங்கிய இடம் ஸ்ரீ சைலம். அங்கு ஈசன் மல்லிகார்ச்சுனம் என்ற பெயருடன் ஜ்யோதிர்லிங்க ரூபியாக இருக்கிறார். அமாவாசை யில் சிவபெருமானும் பௌர்ணமியில் பார்வதியும் வந்து குமாரனைக்கண்டு மகிழ்கின்றனர்.

3. மகாகாளம்

உஜ்ஜயினி நகரத்தில் சிப்பராநதி தீரத்தில் உள்ளது. மாள்வா என்னும் பழைய பட்டணம் விக்கிரமாதித்தன் கட்டிய கோட்டை களின் சின்னங்களோடு இங்குப் பிரசித்தம். வரருசி, பர்த்துரு ஹரி போன்றவர்கள் வாழ்ந்த இடம். கோடி தீர்த்தம் இராமேஸ் வரத்தின் தீர்த்தப் பெயரை நினைப்பூட்டுவதுபோல் உள்ளது. இங்கும் பிரதான லிங்கம் பூமிக்கு அடியில் உள்ளது, விக்கிர மாதித்தியனுக்கு அருளிய காளி டவுனுக்குள்ளும், காளி தாஸனுக்கு அருள்புரிந்த உஜ்ஜயின் மாகாளி டவுனிலிருந்து

ஒரு மைல் தொலைவிலும் ஆக இரண்டு காளிகள் பிரசித்த மாக உள்ளன. இந்தஜோதிர் லிங்கத்தின் ஆலயம் நல்லநிலையில் உள்ளது.

அவந்தி தேசத்தில் வேதப்பிரியன் என்ற அந்தணருக்கு நான்கு குமாரர் இருந்தனர். அவர்களுடைய நல்லொழுக்கத் தாலும் சிவபூசையின் மகிமையினாலும் அந்த தேசமே ஒளி யுடன் விளங்கிற்று. அப்பொழுது இரத்தினமாலா என்ற பர்வதத்தினின்றும் வந்த தூஷணன் என்ற அசுரன் தன் னுடைய மந்திரிகளுடன் கூடி தேசத்தில் எங்குமே நல்ல காரியங்கள் நடக்கவோட்டாமல் தடுத்து வந்தான். பல இடங் களிலும் உள்ள அந்தணர் அவந்தி தேசத்தை அடைந்து, வேதப் பிரியனின் குமாரர்களோடுகூடி இவ்வசுரனை அழிக்க நம்மால் ஆகாது என்று எண்ணி பூசனைகள்செய்து ஈசனிடம் நாடோறும் முறையிட்டு வந்தனர். அவர்கள் பூசைக்குப் பார்த்திவலிங்கம் செய்ய மண் எடுத்த இடம் ஒரு பெரிய குளமாக இருந்தது. ஒருநாள் அந்தணர் யாவரும் பூசைசெய்து தியானத்தில் இருக்கும் பொழுது அசுரன் அவர்களைத் துன்புறுத்த வந்தான். அக் குளத்தினின்றும் மகாகாளேச்வரர் தோன்றி அசுரனை அழித்து, அந்தணர்களின் வேண்டுகோளின் வண்ணம் சிப்ரா நதிக்கரையி லுள்ள உஜ்ஜயினியிலேயே ஜோதிர்லிங்க ரூபமாக எழுந்தருளி யுள்ளார். இதற்கு துக்தேச லிங்கம் உபலிங்கம்.

4. ஓங்காரம்

உஜ்ஜயினிக்கருகில் ஓங்காரேசுவரர் ரோடு ஸ்டேஷனி லிருந்து 7 மைலில் நர்மதா காவேரி சங்கமம். நர்மதையும் காவேரியும் சங்கமமாகி வருமிடம் ஓங்கார வடிவமாக அமைந் துள்ளது. இத்தலத்தில் பஞ்சமுக கணபதி விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. பிரணவப் பொருளாக விளங்குகின்ற பெருமான் விளங்குமிடம் மாந்தாதா என்னும் ஸ்தலம். ஆலயம் நல்ல நிலையில் உள்ளது. அங்குள்ள மலைமாந்தாதாவின் ஆச்ரமம். இதற்கு கர்த்தமேச லிங்கம் உபலிங்கம்.

ஒரு சமயம் கோகர்ணத்தில் சிவதரிசனம் செய்து விந்திய மலையை அடைந்த நாரதர், அம்மலையால் செய்யப்பட்ட பூசையினை ஏற்றுக்கொண்டு, அம்மலைக்குள்ள இறுமாப்பை

அடக்க எண்ணியவராய், விந்தியமலையே! மேருமலை மிகவும் உயரமானது, தங்கமயமானது, தேவர்களாலும் மதிக்கத்தக்க தாயுமுள்ளது என்று கூறிச்சென்றார். அதைக்கேட்டு அழுக்காறுற்ற விந்தியமலை சிவ பூசையினால் ஆகாததொரு காரியமுமில்லை எனத் துணிந்து ஓங்கார ரூபமாய் ஒரு யந்திரம் இயற்றி, பார்த்திவலிங்க பூசையை ஆறுமாதம் வரையில் இடைவிடாதும் இடம் பெயராதும் செய்தது. அவருடைய பூசைக்கு மகிழ்ந்த சிவபெருமானிடம் "எல்லோரினும் உயர்வாகத் தான் வளர வேண்டும்" என வரம் கேட்டது. அப்படியே ஆகுக என வரமளித்த சிவபெருமான், உலகத்தின் க்ஷேமத்தைக் கருதி "நீ இறுமாப்புக்கொண்டால் அப்பேருருவம் எமதடியவரால் சிறிதாக அடங்குக" எனவும் கூறியருளினார். தேவரும் முனிவரும் வேண்ட விந்தியமலைக்கு அருளிய பிரஸாத மூர்த்தமாக எழுந்தருளியுள்ளார். யந்திரத்தில் சுயம்புலிங்கமூர்த்தி ஒன்றும், விந்தியமலை பூசித்த பார்த்திவ லிங்க மூர்த்தம் ஒன்றுமாக இருந்து அருள் வழங்குகிறார். இந்த லிங்கங்கள் முறையே ஓங்காரேச்வரம், அமலேச்வரம் என வழங்கப்படுகின்றன.

5. வைத்தியநாதம்

பர்ப்பாணியிலிருந்து 24மைல். ஸ்ரீ பைஜநாதலிங்கம் என்பது சுவாமியின் பெயர். இலங்கையிலிருந்து இராவணனால் கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் ஆனதால் தரிசனம் மிக விசேஷம். ஊரின் பேயர் வைத்யநாத் என்பது. கோயில் நன்கு உள்ளது. இதற்கு வைஜநாத லிங்கம் உபலிங்கம்.

பீஹாரில் வைத்யநாத் தாம் என்ற க்ஷேத்திரமும் ஜோதிர்லிங்களுள் ஒன்றாகக் கூறப்படுகிறது. அந்த க்ஷேத்திரம் ஜேஸிடி என்ற ஸ்டேஷனிலிருந்து சுமார் 4 மைலில் உள்ளது தனியாக ரயில் பிரிவு செல்லுகிறது. முன்பு வடநாட்டு யாத்திரை சென்று இருந்த சமயத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் இந்த க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளி வழிபட்டுள்ளார்கள்.

கயிலைமலையில் பலகாலம் அர்ச்சித்தும் பயன்பெறாத இராவணன் ஹிமாலயத்தின் தென்புறத்தில் பெரிய குண்டம்

உண்டாக்கித் தன் தலைகளை ஒவ்வொன்ருகக்கொய்து ஹோமம் செய்வாஞயினன். பத்தாவது தலையை வெட்டி எடுக்கும் சமயத்தில் சிவபெருமான் பிரசன்னமாகி சத்துருவுக்கு இளைக்காத வன்மையையும், அறுத்த சிரங்களை மீண்டும் வளரும் படியும் அருளினுர். இந்த சிறப்புடைய தலமே வைத்யநாதம் என்ற பெயருடன் விளங்குகிறது.

6. பீமசங்கரம்

பூனுவிலிருந்து 57 மைல். பம்பாயிலிருந்து 62 மைல். மாஞ்சர் என்ற நகர்க்குச் சென்று மலையில் ஏறிப்போக வேண்டிய இடம். சிவராத்திரி சமயத்தில் தரிசனம் செய்ய ஏராள மான மக்கள் வந்து போவர். பீமசங்கரம் பூனுவிலிருந்து செல்லும் பஸ்ஸில் மாஞ்சர் சென்று மலைமேல் ஏறிச் செல்லவேண்டும். நாசிக்கிலிருந்தும் மாஞ்சர் செல்லலாம். பீமசங்கரத்தில் இப்பொழுது யாத்திரீகர் தங்க வசதியான ரெஸ்ட்ஹவுஸ் உள்ளது. ஆலயம் சிதைந்து இருக்கிறது. இதற்கு பீமேசலிங்கம் உபலிங்கம்.

கும்பகர்ணனுடைய மகனுகிய பீமன் என்ற அசுரன், தன் னுடைய மாதாமஹர் சுதீஷ்ண முனிவராலும் இராவணன், கும்ப கர்ணன் இராமனுலும் கொல்லப்பட்டதை அறிந்து கடுந்தவம் இயற்றி பிர்மதேவனிடம் அபரிமிதமான பலத்தை வரமாகப் பெற்ருன். பிறகு காமரூபதேசத்தரசனுகிய பிரியதர்மனைச் சிறையில் அடைத்து அவனுடைய சைன்யங்களையும் பிடுங்கிக் கொண்டு தேவருக்கும், மக்களுக்கும் துன்பமிழைத்துவந்தான். சிறையில் அடைபட்ட அரசனும், அவன் மனைவி தக்ஷிணு தேவியும் சிவபூசை செய்து வந்தனர். தேவர்கள் மகா கோசி நதிக்கரையில் தவமியற்றினர். அரசன் சிறையில் பூசிப்பதைக் கண்ட காவலர் பீமாசுரனிடம் கூறினர். பீமன் சிறைக்கு வந்து, அப்பூசையை நிறுத்தும்படி கூறியும் அரசன் கேளாமை யால் அரசனைக்கொல்ல வாளை வீசினுன்; தேவருடைய தவத் திற்கும் அரசனுடைய பூசைக்கும் மகிழ்ந்து, அரசனைக் காக்க அரசன் பூசித்த பார்த்திவ லிங்கத்தினின்றும்தோன்றி பீமனுடன் போரிட்டு ஹுங்காரத்தினுல் அவனை வீழ்த்தினுர். இறைவன் பிறகு பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அநுக்கிரஹ

மூர்த்தியாக பீமசங்கரன் (பீமனைக்கொன்ற சங்கரன்) என்ற பெயருடன் எழுந்தருளியுள்ளார். பீமாநதி இங்கு உற்பத்தி யாகிறது.

7. இராமேஸ்வரம்

தென்னாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தது. தென்கோடி மும்முனைகளில் ஒன்று. இராமர் சேதுகட்டிய இடம். தேவாரப்பாடல் பெற்ற சிவதலம். இராமபிரானால் ஸ்தாபித்து வழிபடப்பட்டவர். சிறந்த தீர்த்த விசேடமுடைய திருத்தலம். காசி - இராமேசுரம் இரண்டிலும் நீராடியவர்க்கே தீர்த்தமாடிய பயன் கிடைக்கும் என்பது புராண விதி. ஆலயம் நன்குள்ளது.

தனது மனைவி சீதா தேவியைக் கவர்ந்து சென்ற இராவணனைக்கொன்று சீதையை மீட்க எண்ணிய இராமன் வானர சைன்யங்களுடன் தென் சமுத்திரக் கரையை அடைந்தான். இராவணனுடைய பலத்தைக் கேட்டு கலங்கிய ராமன் குடிக்க நீர் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். ஆனால் கொண்டு வந்த நீரை, சிவபூசை செய்யாமல் குடிக்க மனமின்றி, சிவபூசை செய்து அந்த சுத்தமான நீரை ஈசனுக்கு நிவேதித்தான். பிரசன்னமாகிய சிவபெருமான் இராமனுக்கு இராவணனைக் கொல்லக்கூடிய வலிமையை அளித்தார். பிறகு இராமன் கடலில் அணைகட்டி இலங்கை சென்று வெற்றிபெற்றான். இராமனால் பூசிக்கப்பட்ட இந்த லிங்கம் இராமேசன் எனப்படும். இராவணனைக் கொன்றமையால் உண்டான பிர்மஹத்தி நீங்கு வதற்காக இரமனால் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட தாகவும் சில புராணம் கூறும். இதற்கு குப்தேச லிங்கம் உபலிங்கம்.

8. நாகேசம்

சோண்டி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 14 மைல். தாருகா வனம் என்ற மறு பெயரும் உண்டு. தாருகை, தாருகன் என்ற அரக்கர் குடும்பம் ஒன்று வாழ்ந்து இறை வழிபாடுசெய்த இடம். நாகேசுரர் என்பது பெருமான் திருப்பெயர். சிவலிங்கமூர்த்தி கோமுகையை நோக்கி உள்ளது. ஊரின் பெயர் ஔண்டா என்று சொல்லப்படுகிறது. சிவலிங்கம் பூமிக்கு அடியில் உள்ளது. ஆலயம் சிறிது சிதைந்துள்ளது.

முன்னொரு காலத்தில் கர்மங்களே பயனளிக்கும் கடவுள் வேறுஇல்லை என்ற துணிவுடன் இருந்த தாருகாவன முனிவர் களின் எண்ணத்தை அகற்றி உண்மையையுணர்த்த மோஹினி வேடம் பூண்ட மாலும் பிக்ஷாடன ரூபத்துடன் சிவபெருமானும் தாருகாவனம் சென்ற வரலாறு பற்றியது நாகேசம். சிவமகா புராணத்தில் ஜோதிர்லிங்கங்களில் நாகேசம் என்பதற்குப்பதில் போகேசம் என்று உள்ளது. தாருகை என்ற ராக்ஷசி பார்வதி தேவியின் அருளால் நினைத்தபடி செல்லக்கூடிய 16 யோசனை விஸ்தீர்ணமுள்ள ஒரு வாசஸ்தானத்தைப் பெற்று தன் கணவன் தாருகனுடன் அதில் வாழ்ந்து வந்தாள். அரக்கர் உலகைத் துன்புறுத்தவே, ஔர்வமுனிவரின் சாபத்தால் அசுரா பலர் அழிந்தனர். முனிவரின் சாபத்திற்கு அஞ்சிய தாருகை எஞ்சிய அரக்கர்களைத் தன்னுடைய வாசஸ்தானத்தில் அழைத்துக் கொண்டு கடலின் நடுவே தனதிருப்பிடத்தை இருத்தினுள். அங்கு இருந்துகொண்டு யாவரையும் துன்புறுத்தினுள். ஒரு சமயம் சுப்பிரியன் என்ற வைசியன் சிவபூசையால் சிவப் பிரியனுனன். அவனைச் சிறையிலடைத்த அரக்கனுன தாருகன் அவன் செய்யும் பூசையின் முறையைக் கூறும்படி கேட்க, வைசியன் மறுத்தான். வைசியனைக்கொல்ல முயன்ற அரக்கன் ஈசனுல் அழிவுற்ருன். ஆனுல் தாருகி உமாதேவியினிடம் வரமபெற்று அசுரவம்சம் அழியாமல் காத்துவருகிருள். ஈசனும் அவ்வசுரர்களால் துன்பம் ஏற்படாதவாறு தாருகா வனத்திலேயே இருந்து காத்து வருகிருர். இம்மூர்த்தமே போகேசர் எனப்படும். இதற்கு ஜில்லிகா சரஸ்வதி சங்கமத்தி லுள்ள பூதேச்வர லிங்கம் உபலிங்கம்.

9. விசுவேசம்

காசி என்னும் சிறந்த சிவதலம். வாரணுசி என்னும் மறு பெயருடையது. சப்தமோக்ஷ ஸ்தலங்களில் ஒன்று. சிறந்த கங்கை முதலிய தீர்த்த விசேஷமுடைய தலம். இத்தலத்தின் பெருமையை எவ்வுலகும் அறியும். இது தேவார வைப்புத் தலமாகும். இதற்கு சரண்யேச லிங்கம் உபலிங்கம்.

கர்மங்களை நாசம் செய்வதாலும் சிவஞானத்தால் பிரகாசம் அடையச் செய்வதாலும், காசி எனவும், மகாச்மசானமெனவும் ஈசனுல் எப்போழுதும் விடப்படாமல் இருத்தலின் அவிமுக்தம்

எனவும் வாரணு, ஆசி என்ற நதிகள், கங்கா நதியில் சங்கமமாவதால் வாரணுசி எனவும் பிரசித்தி பெற்றது காசி க்ஷேத்திரம். சிவபெருமானுடைய காதினின்றும் ஒரு மணி விழுந்த இடத்தில் மணிகர்ணிகா என்ற கட்டமும் சிவபெருமானுடைய கையில் இருந்த பிர்ம கபாலம் விழுந்த இடத்தில் கபாலமோசன தீர்த்தமும் மற்றும் பல புண்ணிய கட்டங்களும் உள்ளன. காசியில் மரித்தவருக்கு சிவபெருமான் தாரக மந்திரம் உபதேசம் செய்கிருர். பிரமனுல் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோப்பிரேக்ஷகம், பிர்மன் கையிலிருந்த லிங்கத்தை விஷ்ணு பிரதிஷ்டை செய்ய, பிரமன் பெயரால் விளங்கும் ஹிரண்யகர்ப்பேசம், மறைந்து சிவபெருமான் உறைவதும் பிரமனுல் பிரதிஷ்டை செய்யப்பட்டதுமான லீனேச்சுவரம், புலியுருவத்துடன் துன்புறுத்திய அசுரனே சங்காரம் செய்த வியாக்கிரேசுவரம், மலேயரசனுல் பிரதிஷ்டை செய்யப்பட்ட சைலேச்சுவரம், வாரணு ஆசி இவற்றின் சங்கமங்களிலுள்ள சங்கமேச்சுவரம் மற்றும்பல கோடி இலிங்கங்களாலும் விளங்குவது இக்காசி. இங்குள்ள விசுவேசம் ஜ்யோதிர் லிங்கங்களுள் ஒன்ருகும். இதற்கு சரண்யேச லிங்கம் உபலிங்கம்.

10. திரியம்பகம்

நாஸிக் பஞ்சவடியிலிருந்து 18 மைலில் உள்ளது. கோதாவரியாறு மலேயிலிருந்து நிலத்தில் விழும் இடத்தில் உள்ளது. இத்தலத்திற்குத் திரிசந்திய க்ஷேத்திரம் என்னும் பெயரும் உண்டு. பெருமான் திரியம்பகநாதர் என்னும் பெயருடையவர். ஆலயம் நல்ல நிலேயில் உள்ளது.

நாரணனும் நான்முகனும் நானிலத்தில் தாமே பெரியர் எனத் தருக்குற்று நிற்கப் பெருமான் சோதிப்பிழம்பாய்த்தோன்றி அவர்களின் அகந்தையை அழித்தனன். அந்த வரலாற்றுத் தொடர்போடு மலேச்சிகரங்கள் இங்குள்ளன. குசாவாதீர்த்தம், கன்கல் தீர்த்தம், கஞ்சன தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன. கௌதமர் குகை (ஆச்ரமம்) இங்குள்ளது. கோரக்நாதர் என்ற நவசித்தர்களில் ஒருவர் உருவம் இங்கு உள்ளது. கோதாவரியின் உற்பத்தி ஸ்தானம் இங்கிருந்து நான்குமைல் தூரத்தில் உள்ளது

அநாவிருஷ்டியினால் உலகம் துன்பமடைந்தபோழுது கௌதமமுனிவர் தன்மனைவி அகல்யையுடன் பிரமகிரியில் கடுந்தவமியற்றி, வருணனுடைய சொற்படி ஒரு குளம் தோண்டினார். அதில் குறைவற்ற நீரும் அங்குச் செய்யும் புண்ணிய கர்மங்களுக்கு அளவற்ற பயனும் உண்டாகும்படி அருள் பெற்றார். அங்கு அவர் பூசித்தலிங்கம் கௌதமேச்வரம் பல விடங்களிலுமுள்ள முனிவர் தத்தம் பத்தினிகளுடன் கௌதமரின் ஆச்சிரமம் செழிப்பாயிருப்பதைக் கண்டு அங்கு வந்தனர். சில நாட்களில் பெண்களின் பொய்யான சொற்களுக்குச் செவிசாய்த்த முனிவர்கள் கௌதமரையும் அகல்யையும் அங்கிருந்து துரத்த நினைத்தனர். விநாயகரை யாவரும் வழிபட்டு வேண்டினர். விநாயகர் "முனிவர்களே இது தீயசெயல், பெண்களின் வார்த்தையினால் நீங்கள் மதியிழந்தீர்கள். இவ்விதம் உங்களுக்கு இடம் கொடுத்து உதவிய கௌதமரைத் துரத்துவது தகாத செயல்'' எனக்கூறியும் கேளாமல் அதையே வேண்டினர். இந்தத் தீய செயலுக்கும் பயனை அநுபவிப்பீர்கள் என்று கூறி விநாயகர் ஒரு பசுவின் உருவத்துடன் சென்று கௌதமருக்கு எதிரில் பயிரில் மேய்ந்தார். கௌதமர் கோலால் அடிக்க முயன்றபோழுதே அம்மாயப்பசு உயிரைநீத்தது. அதனால் கோஹத்தி தோஷம் செய்ததாக்கூறிய முனிவர்கள் அவருக்கு அப்பாபம் நீங்க "பிர்மகிரியை 101 பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். கோடி பார்த்திவலிங்கார்ச்சனை செய்யவேண்டும். கங்கையை இங்கே வருவித்து அதில் மூழ்கவேண்டும்'' என்று பிராயச்சித்தம் விதித்தனர். கௌதமரும் அப்படியே செய்தார். சிவபெருமான் பிரசன்னமாகி, முனிவர்களின் தீயசெயலை வெளிப்படுத்தி உனக்குப் பாபமில்லை. என்று அருளினார். சடையினின்றும் கங்கையைச் சிறிதளவு கொடுத்தார். கௌதமர் பிர்மகிரியில் அத்திமரத்தின் வேரிலிருந்து வெளியில் நதிரூபமாக வந்த கங்கையில் நீராடினார். அவ்விடத்திற்குக் கங்காத்துவாரம் என்று பெயர். கௌதமர் பிரார்த்தித்துக் கொண்டுவந்த கங்கை, கோதாவரி எனப்படும். கௌதமர் கொண்டுவந்தமையால் கௌதமீ எனவும்படும். தனக்குத் தீங்கிழைத்த முனிவர்களையும் பரிசுத்தமாகச் செய்யும்படி கௌதமர் கங்கையை வேண்டினார். கோதாவரிக்கரையில் கௌதமருக்கு அருளிய மூர்த்தியாகிய திரியம்பகேசுவரர் ஜோதிர்லிங்கங்களுள் ஒருவர். முனிவர்கள் பவித்திரமணிந்து விதிப்படி ஸ்நானம் செய்த இடம் கங்காத்துவாரத்தின் கீழ்புறம்

குசாவர்த்தம் எனவும் உலகிலுள்ள சகல புண்ணிய தீர்த்தங்களும் வந்து கங்காதர்சனம் செய்தவிடம் கோடிதீர்த்தம் எனவும் கூறப்படும். சிம்ம ராசியில் குரு இருக்கும் ஒரு வருஷமும் இங்கு ஸ்நானம் செய்வது மிகமிக உத்தம பலனை அளிக்கும். இதற்கு சித்தேச லிங்கம் உபலிங்கம்.

11. கேதாரம்

இமாலயத்தில் ரிஷிகேசத்திலிருந்து பஸ் வழியாகவும் நடந்தும் மலைமேல் ஏறிச்செல்ல வேண்டும். தேவாரப்பாடல் பெற்றது. இறைவன் கேதாரேசுவரர். பனியால் மூடப்பட்டிருக்கும் ஆறுமாத காலம் தேவர் பூசிப்பதாகவும் பனியின் உறைவு இல்லாத ஆறுமாதகாலம் மக்கள் பூசிப்பதாகவும் ஐதிகம். ஆலயம் நல்ல நிலையில் உள்ளது. இதற்கு யமுனை தீரத்திலுள்ள பூதேசலிங்கம்- உபலிங்கம்.

பதரிகாச்ரமத்தில் திருமால் நரநாராயண ரூபமாக அவதரித்துப் பார்த்திவ லிங்கபூசை செய்து வந்தார். அவருக்கு சிவபெருமான் கொடுத்த வரத்தை அநுசரித்து ஹிமயமலையில் கேதார ஈச்வர ரூபமாக எழுந்தருளியிருக்கிறார் அங்கு ஒரு கங்கணரூபம் (வளையல்) உள்ளது. அதனைக் கையிற் பூட்டினவனும், தரிசித்தவனும் இஷ்ட சித்தியைப் பெறுவர்.

12. குஸ்மேசுவரம்

அவுரங்கபாத்துக்கு அருகில் இந்தோர் தேச மகாராணியால் கட்டப்பட்ட கோயில். சிவலிங்கம் சிவந்த நிறத்துடன் விளங்குகிறது. சிவந்த நிறமுடையவர் என்னும் பொருளில் க்ருஷ்ணேசுவரர் என்ற பெயரும் வழங்குகிறது. பார்வதிதேவி குங்குமப்பூவால் செய்து வழிபட்ட சிவலிங்கம் என்று கூறப்படுகிறது. அருகில் அற்புத சிற்ப வேலைப்பாடுகளோடு விளங்குகிறது எல்லோரா குகை. ஆலயம் சிறந்த நிலையில் உள்ளது. இதற்கு வியாக்கிரேச லிங்கம் உபலிங்கம்.

தேவகிரி என்ற மலையில் சுதர்மன் என்ற அந்தணன் தன்னுடைய மனைவி சுதேஹை என்பவளுடன் இல்லறம் நடத்தி வந்தான். சிவபூசையிலேயே காலம் கழித்த அவன், பிள்ளையில்லாமையால் வருந்திய மனைவியின் வற்புறுத்தலினால்,

இரண்டாந்தாரமாக தன்னுடைய மைத்துனன் மகள் குஸ்மா என்பவளை மணந்தான். அவளும் சிவ பூசையில் ஈடுபட்டவள். நாடோறும் பூசித்த லிங்கங்களை ஒரே குளத்தில் விஸர்சனம் செய்து வந்தாள். ஈசனருளால் அவளுக்கு சுப்பிரியன் என்ற மகனும் உண்டானன். மணம் செய்துவைக்கும் காலத்தில் சககளத்தியிடம் அன்புடனேயே இருப்பேன் என்று கூறிய சுதேகை இளைய மனைவிக்கு மகன் உண்டானதையும், அவனுக்கும் திருமணம் ஆனதையும் பொருமல், ஓரிரவு கோடாலியினல் சுப்பிரியனைக் கொன்ருள். மறுநாள் சுதர்மனும் குஸ்மையும் வழக்கம்போல் சிவபூசை செய்தனர். சுதேஹையும் மனத்தினுள் மகிழ்ச்சியுடன் வீட்டு வேலையில் ஈடுபட்டாள். வழக்கம் போல் லிங்கங்களைக் குளத்தில் விஸர்ஜனம் செய்து குஸ்மை திரும்பும்பொழுது கொல்லப்பட்டஅவளுடையபிள்ளை சுப்பிரியன் இறந்த நான் பிழைத்து வந்தேன் என்று கூறிக்கொண்டே குளத்திலிருந்து வந்தான். ஈசன் பிரசன்னமாகி " மூத்தாள் கொன்ற உன் பிள்ளையை உயிர்ப்பித்தேன். நீ லிங்கங்களை விஸர்ஜனம் செய்த இக்குளமே எனக்கு ஆலயமாக ஆகட்டும். (சுதர்மனுடைய இளைய மனைவியின் பெயரால்) உன் பெயரால் விளங்குகிறேன் என்று அருளினர். இவற்றுள் உத்தர பிரதேசத்தில் கேதாரமும், காசியும், தென்னட்டில் இராமேச்வரமும், ஆந்திர நாட்டில் ஸ்ரீ சைலமும், பீஹார், மத்திய பிரதேசத்தில் வைத்தியநாதமும் சௌராஷ்ட்ரத்தில் சோமநாதமும், பம்பாய் பிரதேசத்தில் எஞ்சிய மகாகாளம், ஓங்காரம், பீமசங்கரம் குஸ்மேசம் திரியம்பகம், நாகேசம் இவைகளும் உள்ளன. இந்த ஜோதிர்லிங்க ஸ்தலங்களில் சிவராத்திரி மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இப்பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களையும் தரிசித்தல் சகல பாபங்களையும் போக்கும். நினைத்தாலே நன்மைகளைத் தர வல்லன. தருமையாதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், காசி, கேதாரம், இராமேசம் என்ற மூன்று ஜோதிர் லிங்கங்களை முன்னமே தரிசனம் செய்துள்ளார்கள். இந்த யாத்திரையில் எஞ்சியுள்ள ஜோதிர்லிங்கங்களை தரிசித்து எழுந்தருளியுள்ளார்கள்.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது

சிவதல யாத்திரை

திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள்

தேவார பாடசாலை ஆசிரியர், தருமையாதீனம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் தல வழிபாட்டுத் திருவுள்ளம், வண்டிகள் போக்குவரவும் பாதைவசதியுமில்லாது இதுவரை வழிபடாது விடுபட்ட தலங்களை தரிசிக்க வேண்டுமென மீதூர்த்த அன்பு செறிந்து நினைவுற்றது. அவ்வகையில் 13—3—60 ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்குப் பூசனையாற்றிக் குருநாதன் அடியிணையைப் பரவி ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகையின் வழிபாடு முடித்து ஆதீன அடியார்களும் மாயூரம் திரு. V. இராமநாத அய்யர் முதலாய பெருமக்கள் சிலரும் பிரசார வானில் உடனுற 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள்.

1. திருக்கோழம்பம்: காலை மணி 7-30. பசுவடிவு கொண்டு இங்குற்ற அம்மையாரின் குளம்பு பதிந்திடக் குழைந்த வடிவராய் இறைவர் காட்சிநல்கியமைபற்றிஇப்பெயரோடும் திகழ்கிறது இத்தலம். இறைவர் கோழம்பநாதர். முடிமிசை குளம்பு பதிந்த வடிவுடன் திகழ்கின்றனர். இறைவி சௌந்தரநாயகி. ஆலயம் மிகப் பழமையாயுள்ளது. எதிரில் தீர்த்தமும் உள்ளது. இத்தலத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் '' கயிலையாளும் காபாலியை நினைந்துஎன் உள்ளம் உருகுமே, அன்புடைத் தொண்டர்கள் அமரலோகமாளுடையார் இடரேக ஏத்துமின் '' எனும் தலப்பதிகச் சொற்றொடர்களை உன்னியுன்னி ஆரா அன்பு மிகுந்தெழ வழிபட்டருளினார்கள். இது ஆடுதுறையிலிருந்து வீரசோழன்கரைவழியே நான்குமைலில் உள்ள

கறைக்கண்டத்திலிருந்து தெற்கே ஒன்றரைமைலில் திகழ்கிறது. பாதை வண்டிகள் செல்லற்கரிய மேடுபள்ளங்களுடன் குறுகலாயுள்ளது.

2. திருக்கருவிலி : பாருளீர் உய்யுமாறு பிறவிநோயற இது கேண்மின்; கருவிலி ஈசன் கழல் கூடும் எனத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் போற்றும். இது கருவேலி என வழங்குகிறது. சற்குணன் என்னும் மன்னன் ஒருவன் கருக்குழியிற் புகாவகை வழிபட்டருளுற்றமைபற்றி இப்பெயருடையதாயிற்று. இறைவர் சற்குணநாதர் இறைவி சர்வாங்கசுந்தரி. ஏனைய மூர்த்திகளும் மிக அழகாயுள்ளன. ஆலயம் மிகப் பழமையுற்றுள்ளது. இது வடமட்டத்திற்குத் தெற்கே பரவாக்கரையை அடுத்து இரண்டுமைலில் உள்ளது. இரண்டுமைல் வழி அவ்வளவு வசதியாயில்லை.

3. திருச்சிறுகுடி : காலை மணி 10-30. தேனமர்பொழிலணி சிறுகுடி எனத் திருப்பதிகம் போற்றும் இது. தண்மையதாம் எழில் மிக்க இயற்கையது. அங்காரகன், கருடன், கந்தர்வர்கள் பூசித்துப் பேறுற்ற தலம். இறைவர் சுயம்புமூர்த்தி மங்களநாதர். இறைவி மங்களநாயகி. ஆலயம் சிறியதாக அழகோடும் திகழ்கிறது. வடமட்டத்தை அடுத்த வன்னியூருக்கு வடகிழக்கில் மூன்றுமைலில் மணியாங்குடிக்கு அருகிலுள்ளது. பாதை மேடுபள்ளங்களுடன் கூடிய ஒரு வண்டிப்பாதை. நடுவே பாலமில்லாத கீர்த்திமான் ஆற்றையும் கடக்கவேண்டும்,

4. திருப்பாம்புரம் : பகல் மணி 12. பருமணிகோணர்ந்து படப்பையிற் சிதறிடும் அரிசிலின் கரையில் திகழும் பாம்புர நன்னகர் எனத் தலப் பதிகம் போற்றும் இது ஆதிசேடன் பூசித்தது இறைவர் பாம்புரேசுவரர். இறைவி வண்டார்பூங்குழலி. தல விருக்ஷம் வன்னி. ஆலயம் திருப்பணி செய்யப்பெற்று நன்கு திகழ்கிறது. இது சிறுகுடியை அடுத்து கிழக்கே ஒருமைலில் உள்ளது. பாதை நல்லதாக இல்லை.

5. திருநல்லம் : பகல் மணி 12-30. கோனேரிராஜபுரம் என வழங்கும் இது நாகணையான் திருமாலும் நளிர்மலரான் நான்முகனும் போகத்தியல்பினால் போலிய உமையோடும் அமர்ந்தோன். சிவாயநமவென்று நல்லம்மேய நாதன்அடிதொழ

வினைப்பகைமை நீங்கும். நமக்கு நல்லது அது எனத் திருப் பதிகங்கள் போற்றும் சிறப்பினது இறைவர் உமாமகேசுவரர். இறைவி மங்களநாயகி. தவிர இங்கு நடராசர் கண்டார் உள்ளங் கவரும் அற்புதத்திருவடிவர். ஒருமுறை இருமுறை மறுமுறையும் தரிசித்தும் அப்பெருமான் திருமுன் நம் குருமூர்த்திகள் பிரியா விடை கொண்டே மீண்டருளினார்கள்.

6. திருவைகன்மாடக்கோயில் : பகல் மணி 1 - 30. கோச்செங்கணார்செம்பியன் ஆக்கிய வளநகர் மேற்றிசை வைகல்மாடத் திருக்கோயில் எனத் திருப்பதிகம் போற்றும் இது திருமால், இலக்குமி, நான்முகன், வேதங்கள் வழிபட்ட திருத் தலம்.

1. மாடக்கோயில் : திருமால் பூசித்தது. இறைவர் சண்பகாரண்யேசுவரர். இறைவி கோம்பிலிளங்கோதை. மாலுக்கு மணக்கோலம் அருளியமைபற்றி இறைவரின் வலப் பக்கம் உள்ளனர்.

2. வளநகர் : இலக்குமி பூசித்தது. மாடக்கோயிலுக்கு தென்கிழக்கில் சிறு கொட்டகைக்குள் பாலாலயமாக உள்ளது. இறைவர் விசுவநாதர். இறைவி விசாலாக்ஷி.

3. வடகீழ்த்திசையில் வைகற்கோயில் : இது நான்முக னும் வேதங்களும் பூசித்தது. இறைவர் பிரமபுரீசுவரர். நான்கு வர்ண ரேகைகள் திகழும் அற்புத வடிவினர். இறைவி பிரகந்நாயகி. ஆலயம் திருப்பணி செய்து அழகொடும் திகழ்கிறது. பூசனை புரிந்த வேதங்களே நாற்றிசையினும் தீர்த்தங்களாக உள்ளன என்பது தல வரலாறு. இம் மூன்று ஆலயங்களையுடைய இத்தலம் ஆடுதுறையை அடுத்த திருநீலக் குடியின் தென்கிழக்கில் மூன்றுமைலில் உள்ளது. நடுவே பால மில்லாத நதி ஒன்றினைக் கடந்து செல்லவேண்டும். கோடைக் காலமே இத் தலங்களை வழிபட ஏற்றதாகும். நமது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பாதையின் இடர்ப்பாட் டையும் கதிரவனின் கொடுமையையும் சிறிதும் கருதாது சென்று அன்புநிறை சிந்தையுடன் ஆங்காங்குப் பட்டுப்பரிவட்டங்கள் அணிவித்து அருச்சனையுடன் தலப் பதிகங்களைப் பாராயணம் புரிவித்து திருமுறை பாடற் கருத்துக்களை உன்னி உன்னி

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை :
திரியம்பகம் (கௌதமீதீரம்)



தருமையாதீனம்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ திரியம்பகநாதரை வழிபடுதல்

ஜோதிர் லிங்க தரிசனம் :

கேதாரம் (ஹிமாலயம்)

தருமையாதீனம்
25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்
திருப்பனந்தாள் காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும்
ஸ்ரீ கேதாரேசுவரரை வழிபட்டுத் திரும்ப எழுந்தருளுதல்

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை :

குஸ்மேஸம்

தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ க்ருஷ்ணேசுவரரை வழிபடுதல்.

உள்ளுருகி உணர்வித்தும் வழிபாடு புரிந்தருளினார்கள். அவ்வத் தலத்து நிர்வாகிகளும் அன்பர்களும் ஆவின்பாலும் கனிகளோடு இளநீரும் தந்து உபசரித்து ஆசி அருட்திருநீறு பெற்று அகமிக மகிழ்ந்தார்கள். ஆரா இன்ப அருங்கனியீந்து பிரபஞ்சவெப்பம் தணிய அருளும் நம் குரு அருளை வாழ்த்தி வழிபடுவோமாக.

திங்கள்தோறும் திருமுறை வெளியீட்டுடன் நிகழும் ஜென்ம நக்ஷத்திர வழிபாடு 14—3-60 அன்று திருமுதுகுன்றம் ஸ்ரீ பழமலைநாதசுவாமி சிவாலயத்தில் சிறப்புற்றது.

14—3—60 சோமவாரத்தன்று காலை 9 மணிக்கு நமது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுதுகுன்றத்திற்கு எழுந்தருளினார்கள். அவர்களைத் தொடர்ந்து ஒடுக்கம் வித்துவான, ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் முதலாய ஆதீனத்து அடியவர்களும், மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத் தலைவர் திரு. B. திருஞானம் பிள்ளை B.A., B.L., உபதலைவர் திரு. G. சுந்தரேசம் பிள்ளை, செயலாளர் திரு. K. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, திரு. E. N. சோமசுந்தரம் பிள்ளை, திரு. S. விசுவநாத முதலியார் முதலாய பெருமக்களும் மற்றுமுள்ள அன்பர்களும் உடன்வந்துற்றார்கள். ஆதீன பக்தஜன ஆடுர்ப் பாக்கியச் செட்டியார் சீடரும், விருத்தாசலம் தேவாரபாடசாலை அதிபருமான திரு. இரத்தினசபாபதிச் செட்டியார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைப் பணிந்து போற்றி அனைவரையும் வரவேற்று உபசரித்தார்கள். சிற்றுண்டிக்குப்பின் ஒரு சில நடுநாட்டுச் சிவத் தலங்களில் வழிபாடு நிகழ்ந்தது.

1. திருநெல்வாயில்அரத்துறை : காலை மணி 10 - 30. திருஞானசம்பந்தருக்கு முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னம் அளித்த சிவத்தலமிது. ஆலயம் நிவாநதிக் கரையில் அழகோடும் திகழ்கிறது. இறைவர் அரத்துறைநாதர். இறைவி ஆனந்தவல்லி. சேர சோழ பாண்டிய மன்னர்களும் வழிபட்ட மாண்பினது. இது பெண்ணுகடத்தையடுத்து நான்கு மைலில் உள்ளது.

2. மாறன்பாடி : காலை மணி 11. பெண்ணுகடத்திற்கும் அரத்துறைக்கும் இடையே உள்ளது. திருஞானசம்பந்தர்

அஞ்செழுத்தோதி வலம் வந்து பார்மிசை வீழ்ந்து பணிந்து அரத்துறை அரன் அருளையுன்னித் திருப்பதிகம் பாடிப் போற்றி சிவிகைமிசை எழுந்தருளிய இடம். இங்குத்திகழ் ஆலயம் இது.

திருப்பெண்ணாகடம் : பகல் மணி 11-30. தேவகன்னிப் பெண் காமதேனு வெள்ளையானை வழிபட்டமைபற்றி ஊர் பெண்ணாகடம் எனவும், யானையை ஒத்தமைந்துள்ளமைபற்றி ஆலயம் தூங்கானைமாடம் எனவும் வழங்குகின்றது. திருநாவுக்கரசு நாயனாருக்கு இறைவர் சூல இடப முத்திரை பொறித்தருளிய தலம். இறைவர் சுடர்க்கொழுந்தீசர். கலிக்கம்ப நாயனாரின் மனைவியார்க்கு வெட்டுப்பட்ட கை வளர அருளியமைபற்றி கைவழங்கீசர் எனும் திருநாமம் உடைய சுயம்புமூர்த்தி. இறைவி அழகுகாதலி. இவ்வாலயம் நன்குத் திகழ்கின்றது. கயிலை தீர்த்தமும் பார்வதி தீர்த்தமும் உள்ளன.

மெய்கண்டார் ஆலயம் : பகல் மணி 12-30. மெய்கண்டாரின் தந்தை அச்சுதக்களப்பாளர்மேடு என வழங்கிவந்த இடம் இது. இங்குத் திகழும் சந்தானசாரியமூர்த்திகள் ஆலயம் அண்மையில் ஆக்கப்பெற்றது. இதனுள் மெய்கண்டார் முதலாய மூர்த்திகட்கும் வழிபாடு சிறப்புற்றது. அதுகாலை தருமை ஆதீனக் கல்லூரி முதல்வர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகனார் அவர்கள் சிவஞானபோதக் கருத்துக்களை வெளியிட்டார்கள். ஆலயத்தாபகர் பெருநிலக்கிழார் திரு. ரெங்கசாமிப் பிள்ளை அவர்கள் மெய்கண்டார் வரலாற்று வெளியீட்டை அன்பர்கட்கு வழங்கினார்கள். எல்லாத் தலங்கட்கும் உடன் வந்து ஆவன புரிந்து மகிழ்ந்தார்கள்.

திருஎருக்கத்தம்புலியூர்: பகல் மணி 1. இராசேந்திரசோழன் அன்பு கொண்டு பணிசெய்து போற்றியமைபற்றி இராசேந்திரன் பட்டினம் என வழங்கும் இது திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவதரித்த திருத்தலம். தேவாரத் திருமுறைகட்கு சுருதி வழிப் பண் தழுவும் இசை வகுத்த நகரம். இறைவர் திருநீலகண்டர். இறைவி நீலமலர்க்கண்ணி. தலவிருக்ஷம் வெள்ளெருக்கு.

திருமுதுகுன்றம் : பகல் மணி 1 - 30. விருத்தாசலம் தேவார பாடசாலையில் மாகேஸ்வரபூசையும் மாலை சிற்றுண்டியும் நடந்தன. மாலை மணி 5. தேவாரபாடசாலை அதிபர் திரு.

செட்டியார் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுவீற்றிருந்தருளினார்கள். பூசனைகளும் வரவேற்புக்களும் சிறப்புற்றன. திரு. செட்டியார் அவர்கள் குடும்பத்தார்களுடன் மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் வார வழிபாட்டுக் கழகக் குழுவினர்களும் நகரப் பெரு மக்களும் தேவஸ்தான நிர்வாகிகளும் கலந்துகொண்டு வழிபட்டு மகிழ்ந்தார்கள். அன்புநிறை சிந்தைகொண்டு போற்றிய திரு செட்டியார் அவர்கட்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடை போர்த்தி ஆசியருளினார்கள்.

கொளஞ்சியப்பர்கோயில் : மாலை 6 மணி. இது வேண்டு வார் வேண்டுவதுஈயும் கண்கண்டதெய்வமாக முருகன்உறையும் கோயில். இங்குத்திகழும் முருகனை வழிபட்டுத் திரளான அன்பர் கள் இன்றும் பயன்பெறுகின்றனர். தலங்களிலெல்லாம் பட்டுப் பரிவட்டம் அணிவித்து அருச்சனைகள் புரிந்து திருமுறை பாரா யணத்துடன் வழிபாடுகள் நிகழ்ந்தன. அபிடேகத்திற்கென பொற்காசுகளும் வழங்கப்பெற்றன. ஆங்காங்கு திரு. இரத்தின சபாபதிச் செட்டியார் அவர்களுடன் திரு. ரெங்கசாமிப் பிள்ளை அவர்களும் முன்னேற்பாட்டுடன் கதிரவன் கொடுமை தாக்காத படி எலுமிச்சம்பழம் கருப்பஞ்சாறு கலந்த பானங்களை அளித்து உபசரித்தார்கள். மாலை மணி 6-30. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ பழமலைநாதசுவாமி சிவாலய வழிபாட் டிற்கு எழுந்தருளினார்கள். ஆழத்துப்பிள்ளையாரை வழிபட்டு சிவபுராணப் பாராயணத்துடன் மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் வார வழிபாட்டுக் கழகச் சிவனடியார் குழுவினர்களும் உடன் சூழ்ந்துவர சுவாமிக்கும் அம்பிகைக்கும் விசேட அபிடேக ஆராதனைகளும் சகஸ்ரநாம அருச்சனையும் தலத் திருப்பதிகப் பாராயணமும் நிகழ்ந்தன. திருமுதுகுன்றப் பதிக வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. கண்டு கேட்டுற்ற அன்பர்கள் சிவன்பால் அன்பு மிகுந்து ஆனந்தமுற்றார்கள். பின்னர், தேவஸ்தான நிர்வாகிகள் வேண்டுகோளின்படி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அம்பிகை ஆலயத் திருமுன் பிரசாரமண்டபத்திற்கு எழுந்தருளினார்கள். தேவஸ்தானச் சார் பிலும் நகரமக்கள் சார்பிலும், அருச்சகர் சார்பிலும் வரவேற்பு கள் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் "கடவுள் பக்தி என்றும் நிலையாய இன்பம் அளிப்பது; உயிர்கட்கு

மேலாய பயனருளும். அதனையே எல்லோரும் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். வழிபாட்டின் மூலமே நாம் அதனை உறுதல் கூடும் என்பதனையே நம் முன்னோர்கள் நமக்கு உணர்த்திச் சென்றுள்ளார்கள். உணர்ந்து பயனுறுதல் நம் கடமை. இங்கு உற்று வழிபடும் அடியவர் அனைவருக்கும் செந்தமிழ்ச்சொக்கர் இன்னருள் புரிவாராக என ஆசி அருளினார்கள்.

அடுத்து மாயூரம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழி பாட்டுக் கழகத் தலைவர் திரு. B. திருஞானம் பிள்ளை B.A., B.L., அவர்களும் செயலாளர் திரு. K. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்களும் அத்தகைய சிவனருளை இங்கு எட்டாவது கூட்ட மாக வழிபடும் நமக்கு ஆக்குவிப்பது குருவருளே எனச் சான்றுகள் பல காட்டிப் போற்றினார்கள். திரளான மக்கள் குழுமி இருந்து கண்டு கேட்டு இன்புற்றார்கள். வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் நன்றி நவில கடவுள் வாழ்த்துடன் கூட்டம் நிறைவுற்றது.

வாழ்க ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள். வாழ்க அடியார் குழாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil

வைத்தீஸ்வரன்கோவில் தரிசிப்பது என்றாலே ஒரு தனி மகிழ்ச்சி. சிறந்த முறையில் பூஜை ஆராதனைகள் நடைபெறு வதுடன் கோயில் சுத்தமாகவும் மனதுக்கு ரம்மியமாகவும் வைக்கப்பட்டு இருக்கிறது. இம்முறை துடர்ந்து வெற்றிகரமாக செய்யப்பட வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

(ஒ-ம்) ஆர். வெங்கட்டராமன்,
16—8—59.
(Minister, Government of Madras.)

செய்திகள்

திருமுதுகுன்றத்தில் வழிபாடு

தருமையாதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மாதாந்தர ஜன்மநட்சத்திரத் திருநாளைக் குறித்து மாறன்பாடி முதலிய தலங்களை வழிபட்டு திருமுது குன்றத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபட்டருளினார்கள். ஜன்மநட்சத்திர வெளியீடாகிய திருமுது குன்றத் திருப்பதிக வெளியீடும் அன்பர்களுக்கு வழங்கினார்கள்.

மாயூரம், தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழக வழிபாடு

ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் தருமை ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக்கழகத்தினர் (மாயூரம்) ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் வார வழிபாடு நிகழ்த்துதல்போல பல ஆலயங்களில் வழிபாடு நிகழ்த்தினார்கள் சிறப்பாக விகாரி ஆண்டு பங்குனித் திங்கள் 1-ஆம் நாள் (14—3—60) திங்கட்கிழமை காலை தொடங்கி திருமுதுகுன்றம் திருநெல்வாயிலரத்துறை, திருத்தூங்கானைமாடம், மாறன்பாடி ஆகிய திருக்கோயில்களில் (சிவதல யாத்திரை செய்து) வழிபாடு நிகழ்த்தினார்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான தேவஸ்தானங்களுள் 20—3—60 விளநகர் ஸ்ரீ துறை காட்டும் வள்ளலார் தேவஸ்தானம், 27—3—60 திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரர் தேவஸ்தானம், 3—4—60 பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம் ஆகிய தேவஸ்தானங் களில் வார வழிபாட்டை நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் கலந்து கொண்டும் சொற்பொழிவாற்றியும் சிறப்பித்தனர்.

ஆதீனக் கல்வி நிலையக் கழகங்களது ஆண்டுவிழா

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்

அவர்களது அருளால் நடைபெறும் ஆதீனக் கல்வி நிலையக் கழகங்களின் ஆண்டுவிழாவிற்கு 25—3—60 வெள்ளிக்கிழமை யன்று மாயூரம் சபார்டினேட் ஜட்ஜ் திரு. ஹரிஹர அய்யர் B. Sc., B. L., அவர்கள் தலைமையேற்று அறிவுரை வழங்கி விளையாட்டு முதலிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினார்கள். வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை கூறி வரவேற்று கூட்டத்தைச் சிறப்பித்தார்கள். மன்னன்பந்தல் A. V. C. கல்லூரி தலைமைத் தமிழ்ப்பேராசிரியர் திரு. காந்திமதிநாதன் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். மாயூரம் ஜெயா ஸ்போர்ட்ஸ் திரு. அரிகிருஷ்ணசாமி நயினார் அவர்கள் பரிசில் பொருள்கள் நன்கொடையாக வழங்கினார்கள். கல்லூரி முதல்வர் திரு. முத்து. சு. மாணிக்கவாசகனார் அவர்கள் நன்றி முதலியன நவின்று கூட்டத்தைச் சிறப்பித்தார்கள்.

பங்குனித் திங்கட் பெருவிழா

வேளூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் (வைத்தீசுவரன்கோயில்) ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 1—4—60வெள்ளிக் கிழமை முதல் தொடங்கி 10—4—60 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள நாட்களில் பங்குனித் திங்கட் பெருவிழா மிக்க சிறப்பாக நடைபெற்றது. விழா நாட்களில் அறிஞர்கள் பலர் நாள்தோறும் மாலை 6 மணிக்குப் பிரசாரசபா மண்டபத்தில் சொற்பொழி வாற்றினர்.

திருபுவனத்தில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் உருத்திரபாதத் திருநாள் விகாரி ஆண்டு பங்குனித் திங்கள் 19-ஆம் நாள் (1—4—60) வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி பங்குனித் திங்கள் 28-ஆம் நாள் (10—4—60) ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. விழாநாட்களில் ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

பேரளத்தில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ பவானியம்மையார் சமேத ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் 1—4—60 வெள்ளிக்கிழமை முதல் 10—4—60 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள நாட்களில் பங்குனித் திங்கட்பெருவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது.

5—4—60 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்குப் பிரசாதமண்டபத்தில் தருமையாதீன சமயப்பிரசாரகர், சென்னை மாநில அறநிலையச் சொற்பொழிவாளர், திரு. கோ. சிவஞானம் அவர்கள் (திருக்கருக்காவூர்) முருகன் அருள் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

சென்னை சமயப்பிரசார நிலையத்தில்

சென்னைத் தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 9—3—60 மாலை திருவள்ளுவர் நினைவு விழாவும், சமயப் பிரசாரத்திற்காக மலேயா செல்லும் தருமையாதீன வித்துவான், வயிநாகரம், பாலகவி திரு. வே. இராமனுதன் செட்டியார் அவர்களுக்கு வழியனுப்பு வாழ்த்துவிழாவும் கொண்டாடப்பட்டன. விழாவிற்குச் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர்கள் திருக்குறள் எல்லா மதத்திற்கும் பொது வேதமாக உள்ளது அது பெருநெறியாக உலகத்தில் பரவியுள்ளது. தமிழரின் பரந்த மனப்பான்மையைக் கூறுவதாயுள்ளது. நீதிபதிகட்கு வேண்டிய அறவுரையும் கூறியுள்ளார். நீதிபதிகளாய் உள்ளவர்கள் இரண்டு நீதியைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்று வாய்மை, மற்றொன்று நடுவு நிலைமை என்றார் அவர். சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல் போன்றிருக்கவேண்டும் நீதிபதிகள் என்று வள்ளுவர் குறளையும் மேற்கோள் காட்டினார்.

விழாவைத் துவங்கி வைத்த திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் உலகம் அன்பினால் ஒன்றுபட்டு வாழ வேண்டும். இல்லையேல் அச்சத்தாலாவது ஒற்றுமைப்பட வேண்டும். இப்பொழுது அச்சத்தால் ஒற்றுமைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது வள்ளுவர் இவற்றை எல்லாம் தமது திருக்குறளில் விரிவாக வற்புறுத்தியுள்ளார் என்று பேசினார்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையம் (வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்)
திருவள்ளுவர் விழாவில்



சமயப் பிரசாரத்திற்காக மலேயா செல்லும், தருமையாதீனப் புலவர் பாலகவி, வயிநாகரம் திரு. இராமநாதஞ் செட்டியாருக்கு வழியனுப்பு வாழ்த்து விழா

ஆதீனப்புலவர் திரு. இராமநாதன்செட்டியாருக்கு பட்டாடை போர்த்தி வாழ்த்துக் கூறிய நிதி அமைச்சர் கனம். சி. சுப்பிர மணியம் அவர்கள், வள்ளுவர் விழாவும், வழியனுப்பு விழாவும் கொண்டாடுவதிலும் பொருத்தமிருக்கிறது. வள்ளுவர் வழியிலே நாம் செல்லுகிறோம் என்பதற்கு அடையாளமாக இவ்விழா நடைபெறுகிறது. மலேயாவுக்கும் நமது நாட்டிற்கும் அடிக்கடி தொடர்பு இருப்பதால்தான் தமிழ்ப் பண்பு மலேயாவில் பரவி இருக்கிறது மற்ற வெளி தேசங்களில் நமது தமிழ்ப் பண்பு சிறிய அளவில்தான் பரவியுள்ளது. பிஜித் தீவில் நமது பண்பு பரவியிருக்கிறது. தமிழர்கள் உள்ள இடங்களில் நாம் சென்று வருவது நமது பண்பு அவர்களிடம் மறவாமலிருப்பதற்கு வாய்ப் பாகும். அமெரிக்கா கண்டத்தில் மெக்ஸிகோ நாட்டில் நமது கோயில்கள் இருக்கின்றது. இவற்றையெல்லாம் பார்த்தால் தமிழர்கள் உலக முழுவதிலும் தொடர்புகொண்டிருந்தனர் என் பது தெரியவரும். பரவியுள்ளமைக்கு வெளிநாடுகளிலும் நம் நாட்டிலும் பல சான்றுகள் காணப்படுகின்றன. இடைக்காலத் தில் தொடர்பு அற்றுப் போனதால் புதிதாகத் தோன்றுகிறது. புதிய சாதனங்கள் பெருகியுள்ள இக்காலத்தில் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்.

நமது நாட்டிலிருந்து செல்கிறவர்கள் கொள்ளவேண்டிய கொள்கையைக் கூறுகிறேன். அந்த நாடும் நமது நாடுதான் என்று சண்டை வளர்க்கப் போகக்கூடாது. ஒரு பெண்ணை விவாகம் செய்து கொடுத்துவிட்டால் அந்தப் பெண் புருஷனோடு அவன் வீட்டில் இருக்கிறாள். அவளுடன் உறவு பெற்றோர் எப்படிக் கொண்டாடுவார்களோ அப்படித்தான் வெளிநாட்டில் உள்ள தமிழர்களுடன் நாம் தொடர்பு கொள்ளவேண்டும். யுத்தம் வந்தால் இனி துன்பம் இல்லை. அழிவுதான். அத னால்தான் சிறு வேறுகொள்கை படைத்த நாடுகள் ஒன்றுபட முயற்சிக்கின்றன. நாம் என்றுமே காந்தீயத்தின் வழியிலே சமாதானமாகப் போகவே விரும்புகிறோம். இதனை முன்னர் பலர் கேலி செய்தனர். இன்று ஒப்புக்கொள்கின்றனர். உதாரண மாக சீனர்களிடத்தில் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டும் என்றனா பலர். ஆனால் சமாதானத்தையே நாம் விரும்புகிறோம். இதைச் சொன்னால் அது படைபலம் உள்ள நாடு; அதனால் இந்தியா சமாதானத்தை விரும்புகிறது என்று சொல்லுவார்கள்.

கோவா போர்ச்சுகல் முதலிய எளிய பகுதிக்காரர்கள் போர் தொடுத்தால் கொடுக்கிறோம் அப்பகுதிகளை என்கின்றனர். நம்மால் போர் செய்து வெற்றிபெற முடியும். ஆனாலும் நமது சமாதானக் கொள்கைப்படி போர் செய்ய விரும்பவில்லை. இவை திருவள்ளுவர் காட்டும் வழி. காந்தீயம் காட்டும் வழி. வள்ளுவர் நெறியை நாம் நடத்தையில் காட்டவேண்டும் என்று கூறி ஆதீனப் புலவரை வழியனுப்பும் ஆதீனத்தையும் பாராட்டினார்.

புலவர் திரு. முருகவேள், திரு. ச. சிவகுமார், கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் முதலியோரும் பேசினார்கள் பாலகவி திரு. வே. இராமனுதன்செட்டியார் அவர்கள் பணிவுரை கூறினார்கள். வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள். கூட்டத் தொடக்கத்திலும் இறுதியிலும் நிலையத் திருமுறை வகுப்பு மாணவிகளால் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடப்பட்டன.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டத்தின் முதலாவது ஆண்டு விழா

சென்னைத் தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா, 1—4—60 முதல் தமிழ்நாட்டுடன் சேர்ந்துள்ள திருவாலங்காட்டில் 3—4—60 காலை முதல் மாலை வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னையிலிருந்தும், திருவள்ளூர், கைவண்டூர் முதலிய சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் திரளாக மக்கள் வந்து சிறப்பித்தார்கள். சமயப்பிரசார வழிபாட்டுக் குழுவினரைத் திருவாலங்காடு சபாபதி தேசிகர், நகராண்மைக் கழகத் தலைவர், திருமலைப் பிள்ளை. கைவண்டூர் இராஜு முதலியார் ஊர்ப் பொதுமக்கள் ஆகியோர் வரவேற்று உபசரித்தனர். வணிகனுக்குக் கொடுத்த வாக்கிற்காக எழுபது வேளாளர் தீக்குளித்துச் சத்தியம் காத்த பழையனூருக்கும் பிரசாரக் குழுவினர் சென்றனர். அங்குள்ள வேளாளர் அனைவரும் பூரணகும்பத்துடனும், மேளவாத்தியங்களுடனும் வரவேற்று, காலை சிற்றுண்டி அளித்து உபசரித்தனர். திருவாலங்காட்டில்

கைவண்டூர் இராஜு முதலியார் அவர்கள் மதிய உணவு அளித்தார்கள். மாலையில் சபாபதி தேசிகரவர்கள் சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள்.

காலை 10 மணிக்குத் திருக்கோயில் வழிபாடு நடைபெற்றது. சுவாமி சந்நிதியில் அவ்வூர்த் தலத்தேவாரப் பதிகங்களைத் தேவாரஇசைமணி, வி. இலக்குமணன் இசையோடு ஓதி இறைவழி பாட்டில் எல்லோரையும் ஈடுபடச் செய்தார். ஒவ்வோரு சந்நிதியிலும் நிலைய மாணவிகள் பக்திப் பாடல்களைப் பாடினுர்கள்.

மாலை 2 மணிக்குத் திருக்கோயிலின் முன்மண்டபத்தில் சமயப் பிரசாரக் கூட்டம் சைவப்பெரியார். திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஒடுக்கம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பேசியபோது ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிறன்று வெளியூர் சென்று சமயப் பிரசாரமும் வழிபாடும் நிகழ்த்துவது என்ற திட்டத்தைத் தொடங்கி ஓராண்டு பூர்த்தியாகிறது என்றும், இதுவரை 12 தலங்கட்குச் சென்று வழிபாடும். சமயப் பிரசாரமும் செய்ததில் மக்கள் சமயப்பற்றும், விழிப்பும் அடைந்துள்ளார்கள் என்றும், இம் மாதிரி கிராமங்களில் சமயப் பிரசாரம் செய்யவேண்டுவது மிகவும் அவசியம் என்பது ஓராண்டு அனுபவத்தால் தெளிவாகிறது, என்றும், ஓரளவு பலனும் கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்கள்,

காஞ்சீபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார், குடந்தை, திரு. எல். டி. பாலு, புலவர், திரு. முருகவேள், திரு. ஏகாம்பர முதலியார், எம். எல். ஏ., ஆகியோர் சமய நம்பிக்கையின் அவசியத்தைப்பற்றிப் பேசினுர்கள்.

தலைமைவகித்த திரு. சச்சிதானந்தம்பிள்ளையவர்கள் சமயாசாரியர்கள் ஊர் ஊராகச் சென்று கடவுளை வழிபட்டு மக்கட்குக் கடவுள் வழிபாட்டில் நம்பிக்கை ஏற்படச் செய்தார்கள். நல்ல ஞானியர்களது பார்வை மக்கள் மீது பட்டாலே அந்த மக்களும், நகரமும் புனிதமடைகிறது. திருக்கோயில் வழிபாடு நம்மிடம் உள்ள தீய சக்திகளை அகற்றி நல்ல சக்திகளை வளர்க்கிறது.

இந்த நல்லுணர்ச்சிகளை மக்களிடத்தில் பலவகையிலும் தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்கள் வளர்த்துவருகிறார்கள். அவற்றுள் சென்னைப் பிரசார நிலையத்தின் வாயிலாக இம் மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டத்தை இயங்கச் செய்துள்ளார்கள். சென்னையிலுள்ள பல பெருமக்களும், போதுமக்களும் இதில் பங்குகோண்டு பணியாற்றுவதைக் கண்டு அவர்களைப் பாராட்டுகிறேன் என்று பேசினார்கள்.

திரு. சபாபதி தேசிகரவர்களும், திரு. திருமலைப் பிள்ளையவர்களும், ஊர் மக்கள்சார்பில் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினார்கள், திரு. சிவகுமாரன் அவர்கள் பிரசாரக் குழுவினரின் சார்பில் அனைவர்க்கும் நன்றி கூறி, அடுத்த மாதம் 1—5—60 முதல் ஞாயிறன்று சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் கவம் என வழங்கும் திருவிற்கோலத்தில் நடைபெறும் என்று அறிவித்தார்கள். நிலைய மாணவிகள் கடவுள் வாழ்த்துப் பாடினர்.

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீ வைகுண்டம்,

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. கே. முத்துஜோதிடர் அவர்கள்,
திருவிடைமருதூர்.

(சார்வரிஷு சித்திரை மாதம் 1உ முதல் 31உ முடிய)
(13—4—60 முதல் 13—5—60 முடிய)

ஸ்ரீநித்ய மங்கள ஸ்வரூபியாகிய சிவபெருமான் திருவருளால் சார்வரி வருஷம் சித்திரை மாதம் முதல் தேதி, புதவாரம் சுவாதி நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் உதயாதி 2 நாழிகை 5 விநாடி அளவில் மேஷ லக்கினத்தில் மேஷ ஸங்கிரமணப் பிரவேசமாகி உலகமக்கள் சுபிக்ஷத்தோடும் ஆரோக்யத்தோடும் தனதான்ய விருத்தியோடும் ஒருவருக்கொருவர் மாத்ஸர்யம் இல்லாமலும் அனுகூலத்தோடும் சுகவாழ்வு ஏற்பட ஸ்ரீ சர்வேச்வரன் அருள் புரிவாராக.

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி 4 பாதங்களும், பரணி முதல் பாதமும் விசேஷ சுகபோகங்களையும், தனதான்ய விருத்திகளையும், ஆடை ஆபரணச் சேர்க்கைகளையும் தரும். பரணி 2, 3, 4 பாதங்கள் மிச்ரமாக நடக்கும். கார்த்திகை முதல் பாதம் ரோகத்தையும் நஷ்டத்தையும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் வித்யா விருத்தியையும் உத்யோக லாபத்தையும் தரும். ரோஹிணி 4 பாதங்களும் வரவுக்கு மிஞ்சின செலவையும், சரீர பீடையையும் சிறு நஷ்டங்களையும் தரும். மிருகசீர்ஷம் 1, 2 பாதங்கள் சுப சந்தோஷம், தனசேர்க்கை, வித்யா விருத்தி, உத்யோக லாபம், ஆரோக்யம் முதலிய சுபங்களைத் தரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிருகசீர்ஷம் 3, 4 பாதங்கள் சுப சந்தோஷங்களேயும் விவாஹ சுபங்களேயும் தரும். திருவாதிரை 4 பாதங்களும் ஆரோக்யத்தைத் தரும். நஷ்டமான பொருள் வந்து சேரும். மேலோர் பெரியோர் அன்புகிட்டும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் கார்ய சித்தியையும் சத்துருபராஜயத்தையும், குடும்ப அனுகூலங்களேயும், மேலோர் பெரியோர்களின் ஆசியையும் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4-ம் பாதமும், பூசம் நான்கு பாதங்களும் மகத்தான கீர்த்தியையும், வித்யா லாபத்தையும், யஜமான ஸ்தானத்தையும், மேல் பதவியையும், சந்தோஷத்தையும் உண்டு பண்ணும். ஆயில்யம் நான்கு பாதங்களும் தெய்வசக்தி ஓங்கி அசாத்யமெல்லாம் சுபமாகச்செய்து ஏராளமான தன தான்யப்பெருக்கத்துளுடன் வியாபார விருத்தியையும் சுப சோபனுதிகளேயும் தரும். ஞாயிறு, வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் ஆரோக்யத்தையும், ஐச்வர்யத் தையும் தரும். உத்யோக லாபம் ஏற்படும். பூரம் நான்கு பாதங்கள் வரவுக்கு மிஞ்சின செலவும் குடும்பத் தோல்லேயும், வைத்யச்செலவும் ஆதிகமாகும், உத்திரம் முதல் பாதம் இடம் மாறி உத்யோக லாபத்தையும், தீட்டுக்காத்தலேயும் விசேஷ அலேச்சலேயும் உண்டுபண்ணும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும், சுபமாகவே நடக்கும். நஷ்டதனம் வந்துசேரும். ராஜாங்க அனுகூலம் ஏற்படும். விவாஹாதி சுப சோபனுதிகள் நடைபெறும். மகாகீர்த்தியும் உலக பிரசித்தியும் நினேயாத அசாத்ய கார்யமெல்லாம் சுலபமாக

சாதித்தலும், தேவதா குருபிரசாதமும், சபாபூஜ்யத்துவமும் ஏற்படும். தெய்வசக்தி பிரகாசிக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும், ஆரோக்யத்தைத் தந்து எங்கும் நிறைந்த கீர்த்தியையும், நூதன வஸ்திராபரணச் சேர்க்கைகளையும் நூதன கிரஹ லாபங்களையும், கிரய விக்ரய ககசங்களையும் தரும். சந்தோஷம் உண்டாகும். கிரஹத்தில் மங்கள கார்யங்கள் நடைபெறும். திங்கள், புதன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4-ம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும், சுபமிராது. வியாதி, கடன், குடும்பத்தொல்லை முதலியவைகளால் மனம் தளரும். கேட்டை நான்கு பாதங்களும் ஆரோக்யத்தையும், சுகபோகங்களையும் இல்லற சுகத்தையும் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

மூலம் நான்கு பாதங்களும், கவலை தீர்ந்து மன நிம்மதியைத் தரும். பூராடம் நான்கு பாதங்களும், உத்திராடம் முதல் பாதமும், ஆரோக்யம் உண்டுபண்ணும். தெய்வபலத்தால் நினைத்த காரியம் கைகூடும். வித்யா விருத்தியாகும். உத்யோக லாபம் கிட்டும். கீர்த்திபத்திரமும், பலரால் கொண்டாடும் தன்மையும் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾, திருவோணம் - அவிட்டம். ½

மகரராசி ஒன்பது பாதங்களும் அடிக்கடி சஞ்சாரத்தைத் தரும். விசேஷ தனலாபங்களையும் எதிர்பாராத கீர்த்தி பத்திரங்களையும் தரும். மேலோர் பெரியோர்களால் கொண்டாடும் தன்மை உண்டுபண்ணும். கார்யசித்தியாகும். திங்கள், புதன் சுபம்

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி ஒன்பது பாதங்களும் விசேஷ சௌக்கியத்தைத் தரும். நூதன வஸ்திராபரண லாபம், நூதன கிரக பூமிலாபம். குடும்பத்தில் மங்கள கார்யங்கள், உத்யோக லாபம் கீர்த்தி பத்திரம் கிடைத்தல் முதலிய சுபங்கள் மேன்மேலும் விருத்தி யாகும். சேவ்வாய் சனி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி நான்காம் பாதம் தூர யாத்திரையும். ஜல யாத்திரையும், தந்து ஜீவன லாபத்தை ஒங்கச்செய்யும். மனச்சக்தி யால் புதிது புதிதான தோற்றங்களைக் கொடுத்து கீர்த்தியைத் தரும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் சஞ்சார பலனையும், சபா பூஜ்யத்தையும், விசேஷ வித்யாவினய கௌரவங்களையும் தரும். ரேவதி நான்கு பாதங்களும், கிரய விக்ரயங்களில் லாபத்தையும் வெகுகாலமாய் எதிர்பார்த்து நடவாமலிருந்த கார்யங்கள் சாதித்தலையும், ஜீவன லாபத்தையும், மேலோர் பெரியோர் முதலியவர்களின் அன்பையும் தரும். தெய்வபலம் தோன்றும். வெள்ளி, சனி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதம் விந்த்யோத்தர தேசங்களில் இயற்கை மாறுதல்களால் பல மாறுதல்களை உலகில் உண்டு பண்ணும். தென்னாட்டிலும், அனேகவிதமான ஈதிபாதைகளைக் காட்டும். உணவு தான்யங்கள் சரியான முறையில் கிடைத்து ஜனங்களுக்கு திருப்தி உண்டுபண்ணாது. விலைவாசிகள் ஏறியும் இரங்கியும் மாறிக்கோண்டே இருக்கும். ஒருநிலைப் படாது. உலக மக்கள் மதமாத்சர்யாதிகளை விட்டு அவரவர் களின் கடமையைச் சரிவர செய்துகோண்டு நாஸ்தீகமில்லாமல் கடவுளை வழிபட்டுக்கோண்டு எல்லாம் இறைவன் செயல்தான் என்ற நம்பிக்கையுடன் இருந்துவந்தால் மேல்கண்ட தோஷங் களால் பாதிக்காமல் சுபவாழ்வு ஏற்படும். கடவுள் காப்பாராக.

சிவம்

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில் தென்னுப்பிரிக்காவிற்குச் சென்று சமயப்பிரசாரம் செய்து திரும்பிய



" திருவாசகமணி " திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L., அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திப் பாராட்டிய பாராட்டுவிழா.

உ

குருபாதம்

தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் சொற்பொழிவு மாலை 6-30 மணி

17—1—65 அரிவாட்டாயநாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவெண்பா - ஆலந்தரித்தலிங்கம்
— திரு. ம. சிவசம்பு

24—1—65 திருநீலகண்டநாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவெண்பா - கருணைநிதி
— திரு ம. சிவசம்பு

31—1—65 அப்பூதிநாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவெண்பா - நரகம் இனி நாடேம்
— திரு. ம. சிவசம்பு

7—2—65 கலிக்கம்ப நாயனார்
— திரு. வ. ச. நடராசபிள்ளை
சோக்கநாதவெண்பா - உன்னைச் சிங்காரித்து
— திரு. ம. சிவசம்பு

நெல்லை அருணகிரி இசைக் கழகம்,

இராம. கனகசபாபதி,
அமைச்சர்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam
at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-1-65